அறியாது, இளங் கிரி என்று எண்ணி, பிரியாது,
பூங்கொடிக்கள் வைகும் பொரு புனல் குன்று என்னும்
வேங்கடமே—யாம் விரும்பும் வெற்பு. 53

வெற்பு என்று இரும் சோலை, வேங்கடம் என்று இவ் இரண்டும்
நிற்பு என்று நீ மதிக்கும் நீர்மை போல், நிற்பு என்று
உளம்-கோயில் உள்ளம் வைத்து உள்ளினேன்—வெள்ளத்து
இளங் கோயில் கைவிடேல் என்று. 54

என்றும் மறந்தறியேன், ஏழ் பிறப்பும், எப்பொழுதும்,
நின்று நினைப்பு ஒழியா நீர்மையால்—வென்றி
அடல் ஆழி கொண்ட அறிவனே!—இன்பக்
கடல்-ஆழி நீ அருளிக் காண். 55

காணக் கழி காதல் கைமிக்குக் காட்டினால்,
நாணப்படும் என்றால், நாணுமே ? பேணி,
கரு மாலைப் பொன் மேனி காட்டாமுன், காட்டும்—
திருமாலை நங்கள் திரு. 56

திருமங்கை நின்றருளும் தெய்வம் நா வாழ்த்தும்
கருமம் கடைப்பிடிமின் கண்டீர் : உரிமையால்
ஏத்தினோம் பாதம், இருந் தடக்கை எந்தை பேர்—
நால்-திசையும் கேட்டீரே ?—நாம். 57

நாம் பெற்ற நன்மையும்—நா-மங்கை நல் நெஞ்சத்து
ஓம்பி இருந்து, எம்மை ஓதுவித்து, வேம்பின்
பொருள் நீர்மை ஆயினும், பொன் ஆழி பாடு என்று
அருள் நீர்மை தந்த அருள். 58

அருள் புரிந்த சிந்தை அடியார்மேல் வைத்து,
பொருள் தெரிந்து, காண்குற்ற அப்போது, இருள் திரிந்து
நோக்கினேன் ; நோக்கி, நினைந்தேன் அது ஒண் கமலம் ;
ஓக்கினேன் என்னையும், அங்கு ஓர்ந்து. 59

ஓர் உருவன் அல்லை ; ஒளி உருவம் நின் உருவம் ;
ஈர் உருவன் என்பர் இரு நிலத்தோர் ; ஓர் உருவம்
ஆதியாம் வண்ணம் அறிந்தார்-அவர் கண்டீர்
நீதியால் மண் காப்பார், நின்று. 60

நின்றது ஓர் பாதம் நிலம் புதைப்ப, நீண்ட தோள்
சென்று அளந்தது என்பர் திசை எல்லாம்—அன்று
கரு மாணியாய் இரந்த கள்வனே !—உன்னைப்
பிரமாணித்தார் பெற்ற பேறு. 61

பேறு ஒன்றும் முன் அறியேன் ; பெற்று அறியேன் பேதைமையால் ;
மாறு என்று சொல்லி வணங்கினேன்—ஏறின்
பெருத்தெருத்தம், கோடு ஒசிய, பெண் நசையின் பின் போய்,
எருத்து இறுத்த நல்-ஆயர் ஏறு. 62

ஏறு ஏழும் வென்று அடர்த்த எந்தை எரி உருவத்து
ஏறு ஏறி பட்ட இடுசாபம் பாறு ஏறி
உண்ட தலை வாய் நிறைய, கோட்டு அம் கை ஒண் குருதி
கண்ட பொருள் சொல்லின், கதை. 63

கதையின் பெரும் பொருளும், கண்ணா ! நின் பேரே,
இதயம் இருந்தவையே ஏத்தில் : கதையின்
திருமொழியாய் நின்ற திருமாலே ! உன்னைப்
பரு மொழியால் காணப் பணி. 64

பணிந்தேன் திருமேனி ; பைங் கமலம் கையால்
அணிந்தேன், உன் சேவடிமேல், அன்பாய் : துணிந்தேன்—
புரிந்து ஏத்தி உன்னை, புகலிடம் பார்த்து, ஆங்கே
இருந்து ஏத்தி வாழும் இது. 65

இது கண்டாய், நல் நெஞ்சே ! இப் பிறவி ஆவது ;
இது கண்டாய் எல்லாம் நாம் உற்றது ; இது கண்டாய்
நாரணன் பேர் ஓதி, நரகத்து அருகு அணையாக்
காரணமும் ; வல்லையேல், காண். 66

கண்டேன் திருமேனி யான் கனவில் ; ஆங்கு அவன் கைக்
கண்டேன் கனலும் சுடர் ஆழி ; கண்டேன்—
உறு நோய் வினை இரண்டும் ஓட்டுவித்து, பின்னும்,
மறு நோய் செறுவான் வலி. 67

வலி மிக்க வாள் எயிற்று வாள் அவுணர் மாள,
வலி மிக்க வாள் வரை மத்து ஆக, வலி மிக்க
வாள் நாகம் சுற்றி, மறுகக் கடல் கடைந்தான்—
கோள் நாகம் கொம்பு ஒசித்த கோ. 68

கோ ஆகி, மா நிலம் காத்து, நம் கண் முகப்பே
மா ஏகிச் செல்கின்ற மன்னவரும்—பூ மேவும்
செங் கமல நாபியான் சேவடிக்கே, ஏழ் பிறப்பும்,
தண் கமலம் ஏய்ந்தார் தமர். 69

தமர் உள்ளம், தஞ்சை, தலை அரங்கம், தண்கால்,
தமர் உள்ளும் தண் பொருப்பு, வேலை, தமர் உள்ளும்
மாமல்லை, கோவல், மதிள் குடந்தை என்பரே—
ஏ வல்ல எந்தைக்கு இடம். 70

இடங்கை வலம்புரி நின்று ஆர்ப்ப, எரி கான்று,
அடங்கார் ஒடுங்குவித்தது ஆழி—விடம் காலும்
தீ வாய் அரவு-அணைமேல் தோன்றல், திசை அளப்பான்,
பூ ஆர் அடி நிமிர்த்த போது. 71

போது அறிந்து வானரங்கள், பூஞ்சுனை புக்கு, ஆங்கு அலர்ந்த
போது அரிந்துகொண்டு ஏத்தும் ; போது, உள்ளம் ! போதும்,
மணி வேங்கடவன் மலர்-அடிக்கே செல்ல,
அணி—வேங்கடவன் பேர் ஆய்ந்து. 72

ஆய்ந்து உரைப்பன் ஆயிரம் பேர், ஆதி நடு அந்திவாய்
வாய்ந்த மலர் தூவி, வைகலும்—ஏய்ந்த
பிறைக் கோட்டுச் செங்கண் கரி விடுத்த பெம்மான்-
இறைக்கு ஆட்படத் துணிந்த யான். 73

யானே தவம் செய்தேன், ஏழ் பிறப்பும், எப்பொழுதும் ;
யானே தவம் உடையேன் : எம் பெருமான் ! யானே
இருந் தமிழ் நல் மாலை இணை-அடிக்கே சொன்னேன்—
பெருந் தமிழன் நல்லேன், பெருகு. 74

பெருகு மத வேழம் மாப் பிடிக்கு முன் நின்று,
இரு கண் இள மூங்கில் வாங்கி, அருகு இருந்த
தேன் கலந்து, நீட்டும் திருவேங்கடம் கண்டீர்—
வான் கலந்த வண்ணன் வரை. 75

வரைச் சந்தனக் குழம்பும், வான் கலனும், பட்டும்,
விரைப் பொலிந்த வெண் மல்லிகையும் நிரைத்துக்கொண்டு,
ஆதிக்கண் நின்ற அறிவன் அடி-இணையே
ஓதிப் பணிவது உறும். 76

உறும் கண்டாய், நல் நெஞ்சே ! உத்தமன் நல் பாதம் ;
உறும் கண்டாய், ஒண் கமலம்-தன்னால் ; உறும் கண்டாய்—
ஏத்திப் பணிந்து அவன் பேர் ஈர் ஐஞ்ஞூறு, எப்பொழுதும்,
சாத்தி, உரைத்தல் தவம். 77

தவம் செய்து நான் முகனே பெற்றான்—தரணி
நிவந்து அளப்ப நீட்டிய பொற் பாதம் : சிவந்த தன்
கை அனைத்தும் ஆரக் கழுவினான்—கங்கை நீர்
பெய்து, அனைத்துப் பேர் மொழிந்து, பின். 78

பின் நின்று தாய் இரப்ப, கேளான் ; பெரும் பணைத் தோள்
முன் நின்று தான் இரப்பாள், மொய்ம் மலராள் ; சொல் நின்ற
தோள் நலத்தான்—நேர் இல்லாத் தோன்றல், அவன் அளந்த
நீள் நிலம்-தான் அத்தனைக்கும் நேர். 79

நேர்ந்தேன் அடிமை ; நினைந்தேன் அது ஒண் கமலம் ;
ஆர்ந்தேன் உன் சேவடிமேல், அன்பாய் ; ஆர்ந்த
அடிக் கோலம் கண்டவர்க்கு என்கொலோ—முன்னைப்
படிக் கோலம் கண்ட பகல் ? 80

பகல் கண்டேன் ; நாரணனைக் கண்டேன் ; கனவில்
மிகக் கண்டேன் மீண்டு அவனை, மெய்யே ; மிகக் கண்டேன்—
ஊன் திகழும் நேமி ஒளி திகழும் சேவடியான்
வான் திகழும் சோதி வடிவு. 81

வடிக் கோல வாள் நெடுங் கண் மா மலராள் செவ்விப்
படிக் கோலம் கண்டு அகலாள், பல்நாள் ; அடிக்கோலி
ஞாலத்தாள் பின்னும் நலம் புரிந்தது என்கொலோ ?
கோலத்தால் இல்லை குறை. 82

குறையாக வெம் சொற்கள் கூறினேன் ; கூறி,
மறை ஆங்கு என உரைத்த மாலை, இறையேனும்,
ஈயும்கொல் என்றே இருந்தேன் எனைப் பகலும்—
மாயன்கண் சென்ற வரம். 83

வரம் கருதி, தன்னை வணங்காத வன்மை
உரம் கருதி, மூர்க்கத்தவனை நரம் கலந்த
சிங்கமாய்க் கீண்ட திருவன் அடி-இணையே
அம் கண் மா ஞாலத்து அமுது. 84

அமுது என்றும், தேன் என்றும், ஆழியான் என்றும்,
அமுது அன்று கொண்டு உகந்தான் என்றும், அமுது அன்ன
சொல்-மாலை ஏத்தித் தொழுதேன்—சொலப்பட்ட
நல் மாலை ஏத்தி, நவின்று. 85

நவின்று உரைத்த நாவலர்கள் நாள்மலர் கொண்டு, ஆங்கே
பயின்றதனால் பெற்ற பயன் என்கொல் ?—பயின்றார்-தம்
மெய்த் தவத்தால் காண்பு-அரிய மேக மணி வண்ணனை யான்
எத் தவத்தால் காண்பன்கொல், இன்று ? 86

இன்று அறிகின்றேன் அல்லேன்—இரு நிலத்தைச்
சென்று ஆங்கு அளந்த திருவடியை : அன்று,
கருக்கோட்டியுள் கிடந்து, கைதொழுதேன், கண்டேன்—
திருக்கோட்டி எந்தை திறம். 87

திறம்பிற்று, இனி அறிந்தேன்—தென் அரங்கத்து எந்தை
திறம்பா வழிச் சென்றார்க்கு அல்லால், திறம்பாச்
செடி நரகை நீக்கி, தாம் செல்வதன் முன், வானோர்
கடி நகர வாசல்-கதவு. 88

கதவி, கதம் சிறந்த கஞ்சனை முன் காய்ந்து ;
அதவி, போர் யானை ஒசித்து ; பதவியாய்ப்
பாணியால் நீர் ஏற்று, பண்டு ஒருகால் மாவலியை
மாணியாய்க் கொண்டிலையே—மண் ? 89

மண்ணுலகம் ஆளேனே ; வானவர்க்கும் வானவனாய்
விண்ணுலகம்-தன் அகத்தும் மேவேனே—நண்ணித்
திருமாலை, செங்கண் நெடியானை, எங்கள்
பெருமானை, கைதொழுத பின். 90

பின்னால் அரு நரகம் சேராமல், பேதுறுவீர்!
முன்னால் வணங்க முயல்மினோ—பல் நூல்
அளந்தானை, கார்க் கடல் சூழ் ஞாலத்தை எல்லாம்
அளந்தான்-அவன் சேவடி. 91

அடியால் முன் கஞ்சனைச் செற்று, அமரர் ஏத்தும்
படியான், கொடிமேல் புள் கொண்டான், நெடியான்-தன்
நாமமே ஏத்துமின்கள் : ஏத்தினால், தாம் வேண்டும்
காமமே காட்டும்—கடிது. 92

கடிது கொடு நரகம், பிற்காலும் செய்கை
கொடிது என்று, அது கூடாமுன்னம், வடி சங்கம்
கொண்டானை, கூந்தல் வாய் கீண்டானை, கொங்கை நஞ்சு
உண்டானை, ஏத்துமினோ—உற்று. 93

உற்று வணங்கித் தொழுமின் : உலகு ஏழும்
முற்றும் விழுங்கும் முகில் வண்ணன், பற்றிப்
பொருந்தாதான் மார்பு இடந்து, பூம் பாடகத்துள்
இருந்தானை ஏத்தும்—என் நெஞ்சு. 94

என் நெஞ்சம் மேயான் ; என் சென்னியான்—தானவனை
வல் நெஞ்சம் கீண்ட மணி வண்ணன், முன்னம் சேய்
ஊழியான், ஊழி பெயர்த்தான், உலகு ஏத்தும்
ஆழியான், அத்தியூரான். 95

அத்தியூரான், புள்ளை ஊர்வான், அணி மணியின்
துத்தி சேர் நாகத்தின்மேல் துயில்வான், முத்தீ
மறை ஆவான், மா கடல் நஞ்சு உண்டான்-தனக்கும்
இறை ஆவான்—எங்கள் பிரான். 96

எங்கள் பெருமான், இமையோர் தலைமகன், நீ !
செங்கண் நெடு மால் ! திருமார்பா ! பொங்கு
பட மூக்கின் ஆயிர-வாய்ப் பாம்பு-அணைமேல் சேர்ந்தாய்—
குடமூக்குக் கோயிலாக் கொண்டு. 97

கொண்டு வளர்க்க, குழவியாய்த் தான் வளர்ந்தது ;
உண்டது உலகு ஏழும், உள் ஒடுங்க ; கொண்டு
குடம் ஆடி, கோவலனாய் மேவி, என் நெஞ்சம்
இடமாகக் கொண்ட இறை. 98

இறை எம் பெருமான்! அருள் என்று, இமையோர்
முறை நின்று, மொய்ம் மலர்கள் தூவ, அறை கழல
சேவடியான், செங்கண் நெடியான், குறள் உருவாய்
மாவடிவின் மண் கொண்டான் மால். 99

மாலே ! நெடியோனே ! கண்ணனே ! விண்ணவர்க்கு
மேலா ! வியன் துழாய்க் கண்ணியனே ! மேலால்
விளவின் காய் கன்றினால் வீழ்த்தவனே !—என்-தன்
அளவு அன்றால், யானுடைய அன்பு. 100

இரண்டாம் திருவந்தாதி முற்றும்

ஸ்ரீ :

பேயாழ்வார் அருளிச்செய்த

மூன்றும் திருவந்தாதி

திருக் கண்டேன் ; பொன் மேனி கண்டேன் ; திகழும்
அருக்கன் அணி நிறமும் கண்டேன் ; செருக் கிளரும்
பொன் ஆழி கண்டேன்; புரி சங்கம் கைக் கண்டேன்—
என் ஆழி வண்ணன்பால், இன்று. 1

இன்றே கழல் கண்டேன் ; ஏழ் பிறப்பும் யான் அறுத்தேன்—
பொன் தோய் வரை மார்பில் பூந் துழாய், அன்று
திருக் கண்டு கொண்ட திருமாலே! உன்னை
மருக்கண்டுகொண்டு, என் மனம். 2

மனத்து உள்ளான்—மா கடல் நீர் உள்ளான், மலராள்
தனத்து உள்ளான், தண் துழாய் மார்பன், சினத்துச்
செருநர் உகச் செற்று, உகந்த தேங்கு ஓத வண்ணன்,
வரு நரகம் தீர்க்கும் மருந்து. 3

மருந்தும் பொருளும் அமுதமும் தானே—
திருந்திய செங் கண் மால் ஆங்கே பொருந்தியும்
நின்று, உலகம் உண்டு, உமிழ்ந்து, நீர் ஏற்று, மூவடியால்
அன்று உலகம் தாயோன் அடி. 4

அடி வண்ணம் தாமரை ; அன்று உலகம் தாயோன்
படி வண்ணம் பார்க் கடல் நீர் வண்ணம்; முடி வண்ணம்
ஓர் ஆழி வெய்யோன் ; ஒளியும் அஃது அன்றே—
ஆர் ஆழி கொண்டாற்கு அழகு. 5

அழகு அன்றே ஆழியாற்கு ஆழி நீர் வண்ணம் ?
அழகு அன்றே அண்டம் கடத்தல் ? அழகு அன்றே—
அங்கை நீர் ஏற்றாற்கு, அலர் மேலோன் கால் கழுவ,
கங்கை நீர் கான்ற கழல் ? 6

கழல் தொழுதும், வா, நெஞ்சே!—கார்க் கடல் நீர் வேலைப்
பொழில் அளந்த புள் ஊர்திச் செல்வன் எழில் அளந்து அங்கு
எண்ணற்கு அரியானை, எப் பொருட்கும் சேயானை,
நண்ணற்கு அரியானை, நாம். 7

நாமம் பல சொல்லி நாராயணா என்று,
நாம் அங்கையால் தொழுதும், நல் நெஞ்சே! வா, மருவி;
மண்ணுலகம் உண்டு உமிழ்ந்த, வண்டு அறையும் தண் துழாய்,
கண்ணனையே காண்க, நம் கண். 8

கண்ணும் கமலம்; கமலமே கைத்தலமும்;
மண் அளந்த பாதமும் மற்று அவையே; எண்ணில்—
கரு மா முகில் வண்ணன், கார்க் கடல் நீர் வண்ணன்,
திரு மா மணி வண்ணன் தேசு. 9

தேசும், திறலும், திருவும், உருவமும்,
மாசு இல் குடிப்பிறப்பும், மற்றவையும்—பேசில்
வலம் புரிந்த வான் சங்கம் கொண்டான் பேர் ஓத—
நலம் புரிந்து, சென்று அடையும், நன்கு. 10

நன்கு ஓதும் நால் வேதத்து உள்ளான்; நறவு இரியும்
பொங்கு ஓதருவிப் புனல் வண்ணன்; சங்கு ஓதப்
பாற்கடலான்; பாம்பு-அணையின் மேலான்; பயின்று உரைப்பார்
நூல்-கடலான்; நுண்-அறிவினன். 11

அறிவு என்னும் தாள் கொளுவி, ஐம்புலனும் தம்மில்
செறிவு என்னும் திண் கதவம் செம்மி, மறை என்றும்
நன்கு ஓதி, நன்கு உணர்வார் காண்பரே—நாள்தோறும்
பைங்கோத வண்ணன் படி. 12

படி-வட்டத் தாமரை, பண்டு உலகம் நீர் ஏற்று,
அடி-வட்டத்தால் அளப்ப, நீண்ட முடி-வட்டம்
ஆகாயம் ஊடறுத்து, அண்டம் போய் நீண்டதே—
மா காயமாய் நின்ற மாற்கு. 13

மால்பால் மனம் சுழிப்ப, மங்கையர் தோள் கைவிட்டு,
நூல்பால் மனம் வைக்க நொய்விது ஆம்—நால் பால
வேதத்தான், வேங்கடத்தான், விண்ணோர் முடி தோயும்
பாதத்தான் பாதம் பணிந்து. 14

பணிந்து உயர்ந்த பௌவப் படு திரைகள் மோத,
பணிந்த பண மணிகளாலே அணிந்து அங்கு
அனந்தன் அணைக் கிடக்கும் அம்மான்—அடியேன்
மனம் தன் அணைக் கிடக்கும், வந்து. 15

வந்து உதைத்த வெண் திரைகள் செம் பவள வெண் முத்தம்
அந்தி விளக்கும் அணி விளக்காம்—எந்தை—
ஒரு அல்லித் தாமரையாள் ஒன்றிய சீர் மார்வன்,
திருவல்லிக்கேணியான், சென்று. 16

சென்ற நாள், செல்லாத, செங்கண் மால் எங்கள் மால்
என்ற நாள், எந் நாளும் நாள் ஆகும் : என்றும்
இறவாத எந்தை இணை-அடிக்கே ஆளாய்,
மறவாது வாழ்த்துக—என் வாய். 17

வாய் மொழிந்து வாமனனாய் மாவலிபால், மூவடி மண்
நீ அளந்து கொண்ட நெடுமாலே! தாவிய நின்
எஞ்சா இணை-அடிக்கே ஏழ் பிறப்பும் ஆளாகி,
அஞ்சாது இருக்க அருள். 18

அருளாது ஒழியுமே—ஆல் இலைமேல் அன்று
தெருளாத பிள்ளையாய்ச் சேர்ந்தான், இருளாத
சிந்தையராய், சேவடிக்கே செம் மலர் தூய், கைதொழுது,
முந்தையராய் நிற்பார்க்கு முன் ? 19

முன் உலகம் உண்டு உமிழ்ந்தாய்க்கு, அவ் உலகம் ஈர் அடியால்
பின் அளந்து கோடல் பெரிதொன்றே ? என்னே—
திருமாலே! செங்கண் நெடியானே! எங்கள்
பெருமானே!—நீ இதனைப் பேசு! 20

பேசுவார் எவ்வளவு பேசுவர், அவ்வளவே—
வாச மலர்த் துழாய் மாலையான், தேசு உடைய
சக்கரத்தான், சங்கினன், சார்ங்கத்தான், பொங்கு அரவ
வக்கரனைக் கொன்றான் வடிவு. 21

வடிவு ஆர் முடி கோட்டி, வானவர்கள் நாளும்
கடி ஆர் மலர் தூவி, காணும் படியானை,
செம்மையால் உள் உருகி, செவ்வனே, நெஞ்சமே!
மெய்ம்மையே காண விரும்பு. 22

விரும்பி விண் மண் அளந்த, அஞ் சிறைய வண்டு ஆர்
சுரும்பு தொளையில் சென்று ஊத அரும்பும்
புனந் துழாய் மாலையான் பொன் அம் கழற்கே
மனம் துழாய், மாலாய் வரும். 23

வருங்கால், இரு நிலனும், மால் விசும்பும், காற்றும்,
நெருங்கு தீ, நீர் உருவும் ஆனான்—பொருந்தும்
சுடர் ஆழி ஒன்று உடையான்—சூழ் கழலே, நாளும்,
தொடர், ஆழி நெஞ்சே! தொழுது. 24

தொழுதால் பழுது உண்டே—தூ நீர் உலகம்
முழுது உண்டு, மொய் குழலாள் ஆய்ச்சி விழுது உண்ட
வாயானை, மால் விடை ஏழ் செற்றானை, வானவர்க்கும்
சேயானை, நெஞ்சே! சிறந்து? 25

சிறந்த என் சிந்தையும், செங்கண் அரவும்—
நிறைந்த சீர் நீள் கச்சியுள்ளும், உறைந்ததுவும்,
வேங்கடமும் வெஃகாவும் வேளுக்கைப்பாடியுமே—
தாம் கடவார் தண் துழாயார். 26

ஆரே துயர் உழந்தார், துன்பு உற்றார் ஆண்டையார்—
காரே மலிந்த கருங் கடலை நேரே
கடைந்தானை, காரணனை, நீர் அணைமேல் பள்ளி
அடைந்தானை, நாளும் அடைந்து? 27

அடைந்தது அரவு-அணைமேல்; ஐவர்க்கு ஆய் அன்று
மிடைந்தது பாரத வெம் போர்; உடைந்ததுவும்
ஆய்ச்சிபால் மத்துக்கே—அம்மனே!—வாள் எயிற்றுப்
பேய்ச்சி பால் உண்ட பிரான். 28

பேய்ச்சி பால் உண்ட பெருமானைப் பேர்ந்து எடுத்து,
ஆய்ச்சி முலைகொடுத்தாள், அஞ்சாதே—வாய்த்த
இருள் ஆர் திருமேனி இன் பவளச் செவ்வாய்த்
தெருளா மொழியானைச் சேர்ந்து. 29

சேர்ந்த திருமால்—கடல், குடந்தை, வேங்கடம்,
நேர்ந்த என் சிந்தை, நிறை விசும்பு, வாய்ந்த
மறை, பாடகம், அனந்தன்—வண் துழாய்க் கண்ணி
இறைபாடி ஆய இவை. 30

இவை அவன் கோயில்—இரணியனது ஆகம்
அவைசெய்து அரி-உருவம் ஆனான், செவி தெரியா
நாகத்தான், நால் வேதத்து உள்ளான், நறவு ஏற்றான்
பாகத்தான், பாற்கடல் உளான். 31

பாற்கடலும், வேங்கடமும், பாம்பும், பனி விசும்பும்,
நூல்-கடலும், நுண் நூல தாமரைமேல் பாற்பட்டு-
இருந்தார் மனமும் இடமாகக் கொண்டான்—
குருந்து ஒசித்த கோபாலகன். 32

பாலகனாய் ஆல் இலைமேல், பைய உலகு எல்லாம்
மேல் ஒருநாள் உண்டவனே!—மெய்ம்மையே : மாலவனே!
மந்தரத்தால் மா நீர்க் கடல் கடைந்து, வான் அமுதம்
அந்தரத்தார்க்கு ஈந்தாய், நீ—அன்று. 33

அன்று இவ் உலகம் அளந்த அசைவேகொல் ?
நின்று இருந்து வேளுக்கை, நீள் நகர்வாய் அன்று
கிடந்தானை, கேடு இல் சீரானை, முன் கஞ்சைக்
கடந்தானை, நெஞ்சமே!—காண். 34

காண், காண் என விரும்பும் கண்கள்—கதிர் இலகு
பூண் தார் அகலத்தான் பொன் மேனி : பாண்கண்
தொழில் பாடி வண்டு அறையும் தொங்கலான், செம் பொன்
கழல் பாடி, யாம் தொழுதும், கை. 35

கைய கனல் ஆழி, கார்க் கடல் வாய் வெண் சங்கம்,
வெய்ய கதை, சார்ங்கம், வெம் சுடர் வாள்—செய்ய
படை : பரவை பாழி—பனி நீர் உலகம்
அடி அளந்த மாயன்-அவற்கு. 36

அவற்கு அடிமைப் பட்டேன் : அகத்தான், புறத்தான்,—
உவர்க்கும் கருங் கடல் நீர் உள்ளான், துவர்க்கும்
பவள வாய்ப் பூமகளும், பல் மணிப் பூண் ஆரம்,
திகழும் திருமார்பன் தான். 37

தானே தனக்கு உவமன்—தன் உருவே எவ் உருவும் ;
தானே தவ உருவும் தாரகையும் ; தானே
எரி சுடரும், மால் வரையும், எண் திசையும், அண்டத்து
இரு சுடரும் ஆய இறை. 38

இறை ஆய், நிலன் ஆகி, எண் திசையும் தான் ஆய்,
மறை ஆய், மறைப் பொருள் ஆய், வான் ஆய், பிறை வாய்ந்த
வெள்ளத்து அருவி விளங்கு ஒலி நீர் வேங்கடத்தான்
உள்ளத்தின் உள்ளே உளன். 39

உளன் கண்டாய், நல் நெஞ்சே! உத்தமன் ; என்றும்
உளன் கண்டாய் ; உள்ளுவார் உள்ளத்து உளன் கண்டாய்—
விண் ஒடுங்கக் கோடு உயரும் வீங்கு அருவி வேங்கடத்தான்
மண் ஒடுங்க, தான் அளந்த மன். 40

மன்னு மணி முடி நீண்டு, அண்டம் போய், எண் திசையும்,
துன்னு பொழில் அனைத்தும் சூழ் கழலே, மின்னை
உடையாகக் கொண்டு, அன்று உலகு அளந்தான்—குன்றம்
குடையாக ஆ காத்த கோ. 41

கோவலனாய் ஆ-நிரைகள் மேய்த்து, குழல் ஊதி,
மா வலனாய்க் கீண்ட மணி வண்ணன் மேவி,
அரி-உருவம் ஆகி, இரணியனது ஆகம்—
தெரி—உகிரால் கீண்டான் சினம். 42

சின மா மத களிற்றின் திண் மருப்பைச் சாய்த்து,
புனம் மேய பூமி-அதனைத் தனமாக,
பேர் அகலத்துள் ஒடுக்கும் பேர் ஆர மார்வனார்
ஓர் அகலத்து உள்ளது—உலகு. 43

உலகமும், ஊழியும், ஆழியும், ஒண் கேழ்
அலர் கதிரும், செந்தீயும் ஆவான்—பல கதிர்கள்
பாரித்த பைம் பொன் முடியான்—அடி-இணைக்கே
பூரித்து, என் நெஞ்சே! புரி. 44

புரிந்து மத வேழம் மாப் பிடியோடு, ஊடி,
திரிந்து, சினத்தால் பொருது, விரிந்த சீர்
வெண் கோட்டு முத்து உதிர்க்கும் வேங்கடமே—மேல் ஒரு நாள்,
மண் கோட்டுக் கொண்டான் மலை. 45

மலை முகடு மேல் வைத்து, வாசுகியைச் சுற்றி,
தலை முகடு தான் ஒரு கை பற்றி, அலை முகட்டு
அண்டம் போய் நீர் தெறிப்ப, அன்று கடல் கடைந்தான்—
பிண்டமாய் நின்ற பிரான். 46

நின்ற பெருமானே, நீர் ஏற்று ! உலகு எல்லாம்
சென்ற பெருமானே! செங்கண்ணா! அன்று
துரக வாய் கீண்ட துழாய் முடியாய்!—நங்கள்
நரக வாய் கீண்டாயும் நீ. 47

நீ அன்றே—நீர் ஏற்று, உலகம் அடி அளந்தாய்?
நீ அன்றே—நின்று, நிரை மேய்த்தாய்? நீ அன்றே—
மா வாய் உரம் பிளந்து, மா மருதின் ஊடு போய்,
தேவாசுரம் பொருதாய், செற்று? 48

செற்றதுவும் சேரா இரணியனை; சென்று ஏற்றுப்
பெற்றதுவும் மா நிலம்: பின்னைக்கு ஆய், முற்றல்
முரி ஏற்றின் முன் நின்று, மொய்ம்பு ஒழித்தாய்! மூரிச்
சுரி ஏறு சங்கினாய்!—சூழ்ந்து. 49

சூழ்ந்த துழாய் அலங்கல் சோதி மணி முடி மால்
தாழ்ந்த அருவித் தட வரைவாய் ஆழ்ந்த
மணி நீர்ச் சுனை வளர்ந்த மா முதலை கொன்றான்—
அணி நீல வண்ணத்தவன். 50

அவனே அரு வரையால் ஆ-நிரைகள் காத்தான்;
அவனே அணி மருதம் சாய்த்தான்; அவனே
கலங்காப் பெரு நகரம் காட்டுவான் கண்டீர்—
இலங்காபுரம் எரித்தான், எய்து. 51

எய்தான் மராமரம் ஏழும் இராமனாய்;
எய்தான் அம் மான் மறியை ஏந்திழைக்கு ஆய்; எய்ததுவும்
தென் இலங்கைக் கோன் வீழ; சென்று குறள் உரு ஆய்
முன் நிலம் கைக்கொண்டான், முயன்று. 52

முயன்று தொழு, நெஞ்சே!—மூரி நீர் வேலை
இயன்ற மரத்து ஆல் இலையின் மேலால் பயின்று, அங்கு ஓர்
மண் நலம் கொள் வெள்ளத்து மாயக் குழவியாய்,
தண் அலங்கல் மாலையான் தாள். 53

தாளால் சகடம் உதைத்து, பகடு உந்தி,
கீளா மருது இடை போய், கேழல் ஆய் மீளாது
மண் அகலம் கீண்டு, அங்கு ஓர் மாது உகந்த மார்வற்குப்
பெண் அகலம் காதல் பெரிது. 54

பெரிய வரை மார்பில் பேர் ஆரம் பூண்டு,
கரிய முகிலிடை மின் போல, தெரியுங்கால்,
பாண் ஒடுங்க வண்டு அறையும் பங்கயமே மற்று அவன்-தன்
நீள் நெடுங் கண் காட்டும் திறம். 55

நிறம் வெளிது, செய்து, பசிது, கரிது என்று
இறை உருவம் யாம் அறியோம், எண்ணில் ; நிறைவு உடைய
நா-மங்கை-தானும் நலம் புகழ வல்லளே—
பூ-மங்கை கேள்வன் பொலிவு ? 56

பொலிந்து இருண்ட கார் வானில் மின்னேபோல் தோன்றி,
மலிந்து, திரு இருந்த மார்வன், பொலிந்த
கருடன்மேல் கொண்ட கரியான் கழலே
தெருள்-தன்மேல் கண்டாய் தெளி. 57

தெளிந்த சிலாதலத்தின்மேல் இருந்த மந்தி
அளிந்த கடுவனையே நோக்கி, விளங்கிய
வெண் மதியம் தா என்னும் வேங்கடமே—மேல் ஒரு நாள்
மண் மதியில் கொண்டு உகந்தான் வாழ்வு. 58

வாழும் வகை அறிந்தேன்—மை போல் நெடு வரைவாய்த்
தாழும் அருவி போல் தார் கிடப்ப, சூழும்
திரு மா மணி வண்ணன், செங்கண் மால், எங்கள்
பெருமான் அடி சேரப்பெற்று. 59

பெற்றம், பிணை மருதம், பேய் முலை, மாச் சகடம்,
முற்றக் காத்து, ஊடு போய், உண்டு, உதைத்து, கற்றுக்
குணிலை விளங் கனிக்குக் கொண்டு எறிந்தான் ; வெற்றிப்
பணிலம் வாய் வைத்து உகந்தான்—பண்டு. 60

பண்டு எல்லாம், வேங்கடம், பாற்கடல்—வைகுந்தம்
கொண்டு அங்கு உறைவார்க்கு, கோயில் போல்—வண்டு
வளம் கிளரும் நீள் சோலை வண் பூங் கடிகை,
இளங் குமரன்-தன் விண்ணகர். 61

விண்ணகரம், வெஃகா, விரி திரை நீர் வேங்கடம்,
மண் நகரம் மா மாட வேளுக்கை, மண்ணகத்த
தென் குடந்தை, தேன் ஆர் திருவரங்கம், தென்கோட்டி—
தன் குடங்கை நீர் ஏற்றான் தாழ்வு. 62

தாழ் சடையும் நீள் முடியும், ஒண் மழுவும் சக்கரமும்,
சூழ் அரவும் பொன் நாணும் தோன்றுமால்—சூழும்
திரண்டு அருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு,
இரண்டு உருவும் ஒன்றாய் இசைந்து! 63

இசைந்த அரவமும் வெற்பும் கடலும்
பசைந்து, அங்கு அமுது படுப்ப, அசைந்து
கடைந்த வருத்தமோ—கச்சி வெஃகாவில்
கிடந்து, இருந்து, நின்றதுவும், அங்கு? 64

அங்கற்கு இடர் இன்றி, அந்திப் பொழுதத்து,
மங்க இரணியனது ஆகத்தை, பொங்கி,
அரி உருவமாய்ப் பிளந்த அம்மான்-அவனே
கரி உருவம் கொம்பு ஒசித்தான்—காய்ந்து. 65

காய்ந்து, இருளை மாற்றி, கதிர் இலகு மா மணிகள்
ஏய்ந்த பணக் கதிர்மேல் வெவ்வுயிர்ப்ப, வாய்ந்த
மது-கைடபரும் வயிறு உருகி மாண்டார்—
அது கேடு அவர்க்கு இறுதி, ஆங்கு. 66

ஆங்கு மலரும், குவியுமால்—உந்திவாய்
ஓங்கு கமலத்தின் ஒண் போது—ஆம் கைத்
திகிரி சுடர் என்றும், வெண் சங்கம் வானில்
பகரும் மதி என்றும் பார்த்து! 67

பார்த்த கடுவன் சுனை நீர் நிழல் கண்டு
பேர்த்து ஓர் கடுவன் எனப் பேர்ந்து, கார்த்த
களங் கனிக்குக் கை நீட்டும் வேங்கடமே—மேல் நாள்
விளங் கனிக்குக் கன்று எறிந்தான் வெற்பு. 68

வெற்பு என்று வேங்கடம் பாடும்; வியன் துழாய்
கற்பு என்று சூடும் கருங் குழல்மேல்; மல் பொன்ற
நீண்ட தோள் மால் கிடந்த நீள் கடல் நீர் ஆடுவான்,
பூண்ட நாள் எல்லாம் புகும். 69

புகு மதத்தால் வாய் பூசி, கீழ் தாழ்ந்து, அருவி
உகு மதத்தால் கால் கழுவி, கையால் மிகு மதத் தேன்
விண்ட மலர் கொண்டு, விறல் வேங்கடவனையே
கண்டு, வணங்கும்—களிறு. 70

களிறு முகில் குத்த, கை எடுத்து ஓடி,
ஒளிறு மருப்பு ஒசி கை யாளி, பிளிறி
விழ, கொன்று, நின்று அதிரும் வேங்கடமே—மேல் நாள்
குழக் கன்று கொண்டு எறிந்தான் குன்று. 71

குன்று ஒன்றின் ஆய குற மகளிர் கோல் வளைக் கை
சென்று விளையாடும் தீம் கழை போய், வென்று
விளங்கு மதி கோள் விடுக்கும் வேங்கடமே—மேலை
இளங் குமரர் கோமான் இடம். 72

இடம் வலம் ஏழ் பூண்ட இரவித் தேர் ஓட்டி,
வட முக வேங்கடத்து மன்னும் குடம் நயந்த
கூத்தனாய் நின்றான் குரை கழலே கூறுவதே—
நாத்தன்னால் உள்ள நலம். 73

நலமே வலிதுகொல்—நஞ்சு ஊட்டு வன் பேய்
நிலமே புரண்டு போய் வீழ, சலமே தான்,
வெம் கொங்கை உண்டானை, மீட்டு ஆய்ச்சி ஊட்டுவான்,
தன் கொங்கை வாய் வைத்தாள், சார்ந்து? 74

சார்ந்து, அகடு தேய்ப்பத் தடாவிய கோட்டு உச்சிவாய்,
ஊர்ந்து இயங்கும் வெண் மதியின் ஒண் முயலைச் சேர்ந்து,
சின வேங்கை பார்க்கும் திருமலையே—ஆயன்
புன வேங்கை நாறும் பொருப்பு. 75

பொருப்பிடையே நின்றும், புனல் குளித்தும், ஐந்து
நெருப்பிடையே நிற்கவும் நீர் வேண்டா; விருப்பு உடைய
வெஃகாவே சேர்ந்தானை மெய்ம் மலர் தூய்க் கைதொழுதால்,
அஃகாவே தீவினைகள், ஆய்ந்து? 76

ஆய்ந்த அரு மறையோன் நான்முகத்தோன் நன் குறங்கில்
வாய்ந்த குழவியாய், வாள் அரக்கன் ஏய்ந்த
முடிப் போது மூன்று, ஏழ் என்று எண்ணினான் ஆர்ந்த
அடிப் போது நங்கட்கு அரண். 77

அரண் ஆம் நமக்கு என்றும்—ஆழி வலவன்,
முரன் நாள் வலம் சுழிந்த மொய்ம்பன் சரண் ஆமேல்,
ஏது கதி? ஏது நிலை? ஏது பிறப்பு? என்னாதே:
ஓது—கதி-மாயனையே, ஓர்த்து. 78

ஓர்த்த மனத்தராய், ஐந்து அடக்கி, ஆராய்ந்து,
பேர்த்தால், பிறப்பு ஏழும் பேர்க்கலாம்—கார்த்த
விரை ஆர் நறும் துழாய் வீங்கு ஓத மேனி
நிரை ஆர மார்வனையே, நின்று. 79

நின்று எதிராய நிரை மணித் தேர் வாணன் தோள்,
ஒன்றிய ஈர் ஐஞ்னூறு, உடன் துணிய, வென்று இலங்கும்
ஆர் படு வான் நேமி அரவு-அணையான் சேவடிக்கே
நேர்படுவான், தான் முயலும்—நெஞ்சு. 80

நெஞ்சால் நினைப்பு-அரியனேலும், நிலைப்பெற்று, என்
நெஞ்சமே! பேசாய்; நினைக்குங்கால், நெஞ்சத்துப்
பேராது நிற்கும் பெருமானை என்கொலோ—
ஓராது நிற்பது உணர்வு? 81

உணரில், உணர்வு-அரியன்; உள்ளம் புகுந்து
புணரிலும், காண்பு-அரியன் உண்மை; இணர் அணைய,
கொங்கு அணைந்து, வண்டு அறையும் தண் துழாய்க் கோமானை
எங்கு அணைந்து காண்டும், இனி? 82

இனி, அவன் மாயன் என உரைப்பரேலும்,
இனி, அவன் காண்பு-அரியனேலும், இனியவன்,
கள்ளத்தால் மண் கொண்டு விண் கடந்த பைங் கழலான்,
உள்ளத்தின் உள்ளே உளன். 83

உளனாய நான்மறையின் உட்பொருளை, உள்ளத்து
உளனாகத் தேர்ந்து உணர்வரேலும், உளனாய
வண் தாமரை நெடுங் கண் மாயவனை யாவரே
கண்டார்?—உகப்பர் கவி. 84

கவியினார் கை புனைந்து, கண் ஆர் கழல் போய்,
செவியின் ஆர் கேள்வியராய்ச் சேர்ந்தார் புவியினார்
போற்றி உரைக்க, பொலியுமே—பின்னைக்கு ஆய்
ஏற்று உயிரை அட்டான் எழில்? 85

எழில் கொண்ட மின்னுக் கொடி எடுத்து, வேகத்
தொழில்கொண்டு, தான் முழங்கித் தோன்றும்—எழில்கொண்ட
நீர் மேகம் அன்ன நெடுமால் நிறம் போல—
கார் வானம் காட்டும், கலந்து. 86

கலந்து மணி இமைக்கும் கண்ணா! நின் மேனி
மலர்ந்து மரதகமே காட்டும்; நலம் திகழும்
கொந்தின்வாய் வண்டு அறையும் தண் துழாய்க் கோமானை
அந்தி வான் காட்டும் அது. 87

அது நன்று, இது தீது, என்று ஐயப்படாதே,
மது நின்ற தண் துழாய் மார்வன் பொது நின்ற
பொன் அம் கழலே தொழுமின் ; முழுவினைகள்
முன்னம் கழலும், முடிந்து. 88

முடிந்த பொழுதில் குற வாணர், ஏனம்
படிந்து உழு சால் பைந் தினைகள் வித்த, தடிந்து எழுந்த
வேய்ங் கழை போய் விண் திறக்கும் வேங்கடமே—மேல் ஒரு நாள்
தீம் குழல் வாய் வைத்தான் சிலம்பு. 89

சிலம்பும் செறி கழலும் சென்று இசைப்ப, விண் ஆறு
அலம்பிய சேவடி போய் அண்டம், புலம்பிய தோள்
எண் திசையும் சூழ, இடம் போதாது—என்கொலோ
வண் துழாய் மால் அளந்த மண் ? 90

மண் உண்டும், பேய்ச்சி முலை உண்டும் ஆற்றாதாய்,
வெண்ணெய் விழுங்க, வெகுண்டு, ஆய்ச்சி கண்ணிக்
கயிற்றினால் கட்ட, தான் கட்டுண்டிருந்தான்—
வயிற்றினோடு ஆற்றா மகன். 91

மகன் ஒருவர்க்கு அல்லாத மா மேனி மாயன்
மகன் ஆம் ; அவன் மகன்-தன் காதல் மகனைச்
சிறைசெய்த வாணன் தோள் செற்றான் கழலே,
நிறைசெய்து, என் நெஞ்சே ! நினை. 92

நினைத்து, உலகில் ஆர் தெளிவார் நீண்ட திருமால் ?
அனைத்து உலகும் உள் ஒடுக்கி, ஆல்மேல், கனைத்து உலவு
வெள்ளத்து, ஓர் பிள்ளையாய், மெள்ளத் துயின்றானை
உள்ளத்தே வை, நெஞ்சே! உய்த்து. 93

உய்த்து, உணர்வு என்னும் ஒளி கொள் விளக்கு ஏற்றி,
வைத்து, அவனை நாடி வலைப்படுத்தேன் ; மெத்தெனவே
நின்றான், இருந்தான், கிடந்தான்—என் நெஞ்சத்து,
பொன்றாமை, மாயன் புகுந்து. 94

புகுந்து இலங்கும் அந்திப் பொழுதத்து, அரியாய்,
இகழ்ந்த இரணியனது ஆகம் சுகிர்ந்து, எங்கும்
சிந்தப் பிளந்த திருமால் திருவடியே
வந்தித்து, என் நெஞ்சமே! வாழ்த்து. 95

வாழ்த்திய வாயராய், வானோர் மணி மகுடம்
தாழ்த்தி வணங்கத் தழும்பாமே—கேழ்த்த
அடித் தாமரை மலர்மேல் மங்கை மணாளன்
அடித் தாமரை ஆம் அலர்! 96

அலர் எடுத்த உந்தியான், ஆங்கு எழில் ஆய
மலர் எடுத்த மா மேனி மாயன், அலர் எடுத்த
வண்ணத்தான், மா மலரான், வார் சடையான் என்று இவர்கட்கு
எண்ணத்தான் ஆமோ, இமை? 97

இமம் சூழ் மலையும், இரு விசும்பும், காற்றும்
அமம் சூழ்ந்து அற விளங்கித் தோன்றும்—நமன் சூழ்
நரகத்து நம்மை நணுகாமல் காப்பான்—
துரகத்தை வாய் பிளந்தான், தொட்டு. 98

தொட்ட படை எட்டும் தோலாத வென்றியான்,
அட்டபுயகரத்தான், அஞ்ஞான்று, குட்டத்துக்
கோள் முதலை துஞ்ச, குறித்து எறிந்த சக்கரத்தான்
தாள் முதலே நங்கட்குச் சார்வு. 99

சார்வு நமக்கு என்றும்—சக்கரத்தான், தண் துழாய்த்
தார் வாழ் வரை மார்பன்-தான் முயங்கும் கார் ஆர்ந்த
வான் அமரும் மின் இமைக்கும், வண் தாமரை நெடுங் கண்,
தேன் அமரும் பூமேல் திரு. 100

மூன்றும் திருவந்தாதி முற்றும்

ஸ்ரீ :

திருமழிசை ஆழ்வார் அருளிச்செய்த

நான்காம் திருவந்தாதி

நான்முகனை நாராயணன் படைத்தான் ; நான்முகனும்
தான் முகமாய்ச் சங்கரனைத் தான் படைத்தான் ; யான் முகமாய்
அந்தாதி மேலிட்டு அறிவித்தேன் ஆழ் பொருளை ;
சிந்தாமல் கொள்மின் நீர், தேர்ந்து. 1

தேருங்கால், தேவன் ஒருவனே என்று உரைப்பர் ;
ஆரும் அறியார் அவன் பெருமை ; ஓரும்
பொருள் முடிவும் இத்தனையே ; எத் தவம் செய்தார்க்கும்
அருள் முடிவது ஆழியான்பால். 2

பாலில் கிடந்ததுவும், பண்டு அரங்கம் மேயதுவும்,
ஆலில் துயின்றதுவும் ஆர் அறிவார்—ஞாலத்து
ஒரு பொருளை, வானவர்-தம் மெய்ப் பொருளை, அப்பில்
அரு பொருளை யான் அறிந்த ஆறு ? 3

ஆறு சடைக் கரந்தான் அண்டர்கோன்-தன்னோடும்
கூறு உடையன் என்பதுவும் கொள்கைத்தே ?—வேறு ஒருவர்
இல்லாமை நின்றானை, எம்மானை, எப் பொருட்கும்
சொல்லானைச் சொன்னேன், தொகுத்து. 4

தொகுத்த வரத்தனைத் தோலாதான் மார்வம்
வகிர்த்த வளை உகிர், தோள் மாலே! உகத்தில்
ஒருநான்று நீ உயர்த்தி, உள்வாங்கி, நீயே
அரு நான்கும் ஆனாய்—அறி. 5

அறியார் சமணர் ; அயர்த்தார் பவுத்தர் ;
சிறியார் சிவப்பட்டார் ; செப்பில்—வெறியாய
மாயவனை, மாலவனை, மாதவனை ஏத்தாதார்
ஈனவரே, ஆதலால் இன்று. 6

இன்று ஆக, நாளையே ஆக, இனிச் சிறிது
நின்று ஆக, நின் அருள் என்பாலதே ; நன்றாக
நான் உன்னை அன்றி இலேன் கண்டாய் ; நாரணனே!
நீ என்னை அன்றி இலை. 7

இலை துணை மற்று, என் நெஞ்சே!—ஈசனை வென்ற
சிலை கொண்ட செங்கண் மால் சேரா குலை கொண்ட
ஈர்-ஐந்தலையான் இலங்கையை ஈடு அழித்த
கூர் அம்பன் அல்லால், குறை. 8

குறைகொண்டு, நான்முகன் குண்டிகை-நீர் பெய்து,
மறைகொண்ட மந்திரத்தால் வாழ்த்தி, கறைகொண்ட
கண்டத்தான் சென்னிமேல் ஏறக் கழுவினன்—
அண்டத்தான் சேவடியை, ஆங்கு. 9

ஆங்கு, ஆரவாரம்-அது கேட்டு, அழல் உமிழும்
பூங் கார் அரவு-அணையான் பொன் மேனி யாம் காண
வல்லமே அல்லமே? மா மலரான், வார் சடையான்
வல்லரே அல்லரே—வாழ்த்து ! 10

வாழ்த்துக வாய் ; காண்க கண் ; கேட்க செவி ; மகுடம்
தாழ்த்தி வணங்குமின்கள் தண் மலரால்—சூழ்த்த
துழாய் மன்னு நீள் முடி என் தொல்லை மால்-தன்னை
வழா, வண் கை கூப்பி, மதித்து. 11

மதித்தாய் போய்—நான்கில் மதியார் போய் வீழ
மதித்தாய் ; மதி கோள் விடுத்தாய்! மதித்தாய்
மடுக் கிடந்த மா முதலை கோள் விடுப்பான், ஆழி
விடற்கு ; இரண்டும் போய் இரண்டின் வீடு. 12

வீடு ஆக்கும் பெற்றி அறியாது, மெய் வருத்திக்
கூடு ஆக்கி நின்று, உண்டு, கொன்று உழல்வீர்! வீடு ஆக்கும்
மெய்ப்பொருள்-தான், வேத முதற்பொருள்-தான், விண்ணவர்க்கு
நற்பொருள்-தான்—நாராயணன். 13

நாராயணன், என்னை ஆளி, நரகத்துச்
சேராமல் காக்கும் திருமால்-தன் பேரான
பேசப் பெறாத பிணச் சமயர் பேசக் கேட்டு,
ஆசைப்பட்டு ஆழ்வார் பலர். 14

பல தேவர் ஏத்த, படி கடந்தான் பாதம்
மலர் ஏற இட்டு, இறைஞ்சி, வாழ்த்த வலர் ஆகில்,
மார்க்கண்டன் கண்ட வகையே வரும் கண்டீர்—
நீர்க்கண்டன் கண்ட நிலை. 15

நிலைமன்னும் என் நெஞ்சம்—அந்நான்று, தேவர்
தலைமன்னர் தாமே மாற்றாக, பல மன்னர்
போர் மாள, வெம் கதிரோன் மாய, பொழில் மறைய,
தேர் ஆழியால் மறைத்தாரால். 16

ஆல நிழற்கீழ் அறநெறியை நால்வர்க்கு
மேலை யுகத்து உரைத்தான் மெய்த் தவத்தோன்—ஞாலம்
அளந்தானை, ஆழிக் கிடந்தானை, ஆல்மேல்
வளர்ந்தானைத் தான் வணங்குமாறு. 17

மாறு ஆய தானவனை வள் உகிரால் மார்வு இரண்டு
கூறாகக் கீறிய கோளரியை வேறாக
ஏத்தியிருப்பாரை, வெல்லுமே—மற்று அவரைச்
சாத்தியிருப்பார் தவம். 18

தவம் செய்து, நான்முகனால் பெற்ற வரத்தை
அவம் செய்த ஆழியாய் அன்றே?—உவந்து எம்மைக்
காப்பாய் நீ; காப்பதனை ஆவாய் நீ; வைகுந்தம்
ஈப்பாயும் எவ் உயிர்க்கும் நீ. 19

நீயே உலகு எல்லாம்; நின் அருளே நிற்பனவும்;
நீயே தவத் தேவ-தேவனும்; நீயே—
எரி சுடரும், மால் வரையும், எண் திசையும், அண்டத்து
இரு சுடரும் ஆய இவை. 20

இவையா—பில வாய் திறந்து எரி கான்ற!
இவையா—எரிவட்டக் கண்கள்! இவையா—
எரி பொங்கிக் காட்டும் இமையோர் பெருமான்
அரி பொங்கிக் காட்டும் அழகு! 21

அழகியான் தானே, அரி உருவன் தானே,
பழகியான் தாளே பணிமின்: குழவியாய்த்
தான் ஏழ் உலகுக்கும், தன்மைக்கும் தன்மையனே,
மீன் ஆய், உயிர் அளிக்கும் வித்து. 22

வித்தும் இடவேண்டும் கொல்லோ—விடை அடர்த்த
பத்தி உழவன் பழம் புனத்து?—மொய்த்து எழுந்த
கார் மேகம் அன்ன கரு மால் திருமேனி
நீர் வானம் காட்டும், நிகழ்ந்து. 23

நிகழ்ந்தாய்—பால் பொன் பசுப்புக் கார் வண்ணம் நான்கும்;
இகழ்ந்தாய்—இருவரையும் வீய; புகழ்ந்தாய்—
சினப் போர்ச் சுவேதனைச் சேனாபதியாய்
மனப் போர் முடிக்கும் வகை. 24

வகையால் மதியாது மண் கொண்டாய்; மற்றும்
வகையால் வருவது ஒன்று உண்டே?—வகையால்
வயிரம் குழைத்து உண்ணும் மாவலி, தான் என்னும்,
வயிர-வழக்கு ஒழித்தாய், மற்று. 25

மற்றுத் தொழுவார் ஒருவரையும் யான் இன்மை
கற்றைச் சடையான் கரி கண்டாய்: எற்றைக்கும்—
கண்டுகொள் கண்டாய், கடல்வண்ணா!—யான் உன்னைக்
கண்டுகொளகிற்குமாறு. 26

மால்-தான் புகுந்த மட நெஞ்சம் மற்றதுவும்
பேறாகக் கொள்வனோ, பேதைகாள்!—நீறாடி-
தான் காண மாட்டாத தார் அகலச் சேவடியை
யான் காண வல்லேற்கு இது? 27

இது—இலங்கை ஈடு அழியக் கட்டிய சேது;
இது—விலங்கு வாலியை வீழ்த்தது; இது—இலங்கை-
தான் ஒடுங்க, வில் நுடங்க, தண் தார் இராவணனை
ஊன் ஒடுங்க, எய்தான் உகப்பு. 28

உகப்பு உருவன் தானே, ஒளி உருவன் தானே,
மகப்பு உருவன் தானே; மதிக்கில்—மிகப் புருவம்
ஒன்றுக்கு ஒன்று ஓசனையான் வீழ, ஒரு கணையால்
அன்றிக்கொண்டு எய்தான்-அவன். 29

அவன் என்னை ஆளி, அரங்கத்து; அரங்கில்
அவன் என்னை எய்தாமல் காப்பான்; அவன் என்னது
உள்ளத்து நின்றான், இருந்தான்—கிடக்குமே,
வெள்ளத்து அரவு-அணையின்மேல்? 30

மேல், நான்முகன் அரனை இட்ட விடு சாபம்
தான் நாரணன் ஒழித்தான், தாரகையுள்; வானோர்
பெருமானை ஏத்தாத பேய்காள்! பிறக்கும்
கரு மாயம் பேசில், கதை. 31

கதைப் பொருள்-தான் கண்ணன் திருவயிற்றின் உள்ள,
உதைப்பளவு போதுபோக்கு இன்றி; வதைப்பொருள்-தான்—
வாய்ந்த குணத்துப் படாதது : அடைமினோ—
ஆய்ந்த குணத்தான் அடி. 32

அடிச் சகடம் சாடி, அரவு ஆட்டி, யானை
பிடித்து ஒசித்து, பேய் முலை நஞ்சு உண்டு, வடிப் பவள
வாய்ப் பின்னை தோளிக்கா, வல் ஏற்று எருத்து இறுத்து,
கோ பின்னும் ஆனான்—குறிப்பு. 33

குறிப்பு—எனக்குக் கோட்டியூர் மேயானை ஏத்த ;
குறிப்பு—எனக்கு நன்மை பயக்க : வெறுப்பனோ—
வேங்கடத்து மேயானை, மெய் வினை நோய் எய்தாமல்
தான் கடத்தும் தன்மையான் தாள் ? 34

தாளால் உலகம் அளந்த அசைவேகொல் ?
வாளா கிடந்தருளும், வாய்திறவான்—நீள் ஓதம்
வந்து அலைக்கும் மா மயிலை மா அல்லிக் கேணியான்,
ஐந்தலை வாய் நாகத்து அணை. 35

நாகத்து அணைக் குடந்தை, வெஃகா, திரு எவ்வுள் ;
நாகத்து அணை அரங்கம், பேர், அன்பில் ; நாகத்து
அணைப் பாற்கடல் கிடக்கும் : ஆதி நெடுமால்
அணைப்பார் கருத்தன் ஆவான். 36

வான், உலவு தீ வளி, மா கடல், மா பொருப்பு,
தான் உலவு வெம் கதிரும் தண் மதியும், மேல் நிலவு
கொண்டல், பெயரும், திசை எட்டும், சூழ்ச்சியும்,
அண்டம்—திருமால் அகைப்பு. 37

அகைப்பு இல் மனிசரை ஆறு சமயம்
புகைத்தான், பொரு கடல் நீர் வண்ணன், உகைக்குமேல்,
எத் தேவர் வாலாட்டும், எவ்வாறு செய்கையும்,
அப்போது ஒழியும்—அழைப்பு. 38

அழைப்பன் திருவேங்கடத்தானைக் காண ;
இழைப்பன் திருக்கூடல், கூட—மழைப் பேர்
அருவி மணி வரன்றி வந்து இழிய, யானை
வெருவி, அரவு ஒடுங்கும் வெற்பு. 39

வெற்பு என்று வேங்கடம் பாடினேன்; வீடு ஆக்கி
நிற்கின்றேன்; நின்று நினைக்கின்றேன்; கற்கின்ற
நூல் வலையில் பட்டிருந்த நூலாட்டி கேள்வனார்
கால் வலையில் பட்டிருந்தேன் காண். 40

காணல் உறுகின்றேன்—கல் அருவி முத்து உதிர,
ஓண விழவில் ஒலி அதிர, பேணி
வரு வேங்கடவா! என் உள்ளம் புகுந்தாய்;
திருவேங்கடம்-அதனைச் சென்று. 41

சென்று வணங்குமினோ, சேண் உயர் வேங்கடத்தை,
நின்று வினை கெடுக்கும் நீர்மையால்—என்றும்
கடிக் கமல நான்முகனும் கண்மூன்றத்தானும்
அடிக் கமலம் இட்டு, எத்தும் அங்கு. 42

மங்குல் தோய் சென்னி வட வேங்கடத்தானை,
கங்குல் புகுந்தார்கள், காப்பு அணிவான்—திங்கள்
சடை ஏற வைத்தானும் தாமரைமேலானும்
குடை ஏற, தாம் குவித்துக் கொண்டு. 43

கொண்டு, குடங்கால்மேல் வைத்த குழவியாய்,
தண்ட அரக்கன் தலை தாளால் பண்டு எண்ணிப்
போம் குமரன் நிற்கும் பொழில் வேங்கடமலைக்கே
போம், குமரருள்ளீர்!—புரிந்து. 44

புரிந்து, மலர் இட்டுப் புண்டரிகப் பாதம்
பரிந்து, படுகாடு நிற்ப, தெரிந்து எங்கும்
தான் ஓங்கி நிற்கின்றான் தண் அருவி வேங்கடமே—
வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு. 45

வைப்பன் மணி விளக்கா மா மதியை மாலுக்கு என்று,
எப்பொழுதும் கை நீட்டும் யானையை, எப்பாடும்,
வேடு வளைக்கக் குறவர் வில் எடுக்கும் வேங்கடமே
நாடு வளைத்து, ஆடுதுமேல் நன்று. 46

நன்மணி வண்ணன் ஊர்—ஆளியும் கோளரியும்,
பொன், மணியும், முத்தமும், பூ-மரமும், பன்மணி, நீ-
ரோடு பொருது உருளும் கானமும், வானரமும்,
வேடும் உடை வேங்கடம். 47

வேங்கடமே—விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால் ;
வேங்கடமே—மெய் வினை நோய் தீர்ப்பதுவும் ; வேங்கடமே—
தானவரை வீழத் தன் ஆழிப் படை தொட்டு,
வானவரைக் காப்பான் மலை. 48

மலை ஆமைமேல் வைத்து, வாசுகியைச் சுற்றி,
தலை ஆமை தான் ஒரு கை பற்றி, அலையாமல்,
பீறக் கடைந்த பெருமான் திரு நாமம்
கூறுவதே—யாவர்க்கும் கூற்று. 49

கூற்றமும் சாரா ; கொடு வினையும் சாரா ; தீ-
மாற்றமும் சாராவகை அறிந்தேன்—ஆற்றங்
கரைக் கிடக்கும் கண்ணன், கடல் கிடக்கும் மாயன்,
உரைக் கிடக்கும் உள்ளத்து எனக்கு. 50

எனக்கு ஆவார் ஆர் ஒருவரே ? எம் பெருமான்
தனக்கு ஆவான் தானே மற்று அல்லால், புனக் காயா
வண்ணனே ! உன்னைப் பிறர் அறியார் : என் மதிக்கு
விண் எல்லாம் உண்டோ விலை ? 51

விலைக்கு ஆட்படுவர், விசாதி ஏற்று உண்பர்,
தலைக்கு ஆட்பலி திரிவர்—தக்கோர் : முலைக்கால்
விடம் உண்ட வேந்தனையே வேறு ஏத்தாதார்,
கடம் உண்டார், கல்லாதவர். 52

கல்லாதவர் இலங்கை கட்டழித்த காகுத்தன்
அல்லால், ஒரு தெய்வம் யான் இலேன் ; பொல்லாத
தேவரை, தேவர் அல்லாரை, திரு இல்லாத்
தேவரைத் தேறேல்மின்—தேவு. 53

தேவராய் நிற்கும் அத் தேவும், அத் தேவரில்
மூவராய் நிற்கும் முது புணர்ப்பும், யாவராய்
நிற்கின்றது எல்லாம் நெடுமால் என்று ஓராதார்
கற்கின்றது எல்லாம் கடை. 54

கடை நின்று அமரர் கழல் தொழுது, நாளும்,
இடைநின்ற இன்பத்தர் ஆவர்—புடைநின்ற
நீர் ஓத மேனி நெடுமாலே ! நின் அடியை
யார் ஓத வல்லார்-அவர் ? 55

அவர் இவர் என்று இல்லை ; அனங்கவேள் தாதைக்கு
எவரும் எதிர் இல்லை கண்டீர் : உவரிக்
கடல் நஞ்சம் உண்டான், கடன் என்று, வாணற்கு
உடன் நின்று, தோற்றான் ஒருங்கு. 56

ஒருங்கு இருந்த நல்வினையும் தீவினையும் ஆவான்,
பெரும் குருந்தம் சாய்த்தவனே, பேசில் ; மருங்கு இருந்த
வானவர்-தாம், தானவர்-தாம், தாரகை-தான், என் நெஞ்சம்
ஆனவர்-தாம்—அல்லாதது என் ? 57

என் நெஞ்சம் மேயான், இருள் நீக்கி, எம்பிரான்,
மன் அஞ்ச, முன் ஒரு நாள், மண் அளந்தான் ; என் நெஞ்சம்
மேயானை இல்லா விடை-ஏற்றான் வெவ்வினை தீர்த்து,
ஆயானுக்கு ஆக்கினேன்—அன்பு. 58

அன்பு ஆவாய், ஆர் அமுதம் ஆவாய், அடியேனுக்கு
இன்பு ஆவாய், எல்லாமும் நீ ஆவாய் ; பொன்-பாவை
கேள்வா ! கிளர் ஒளி என் கேசவனே ! கேடு இன்றி
ஆள்வாய்க்கு அடியேன் நான்—ஆள். 59

ஆள் பார்த்து உழிதருவாய் ! கண்டுகொள்—என்றும் நின்
தாள்பார்த்து உழிதருவேன் தன்மையை : கேட்பார்க்கு
அரும் பொருளாய் நின்ற அரங்கனே! உன்னை
விரும்புவதே விள்ளேன் மனம். 60

மனக் கேதம் சாரா—மதுசூதன்-தன்னைத்
தனக்கே-தான் தஞ்சமாக் கொள்ளில் : எனக்கே-தான்
இன்று—ஒன்றி நின்று, உலகை ஏழ் ஆணை ஓட்டினான்
சென்று, ஒன்றி நின்ற திரு. 61

திரு நின்ற பக்கம் திறவிது என்று ஓரார்
கரு நின்ற கல்லார்க்கு உரைப்பர்—திரு இருந்த
மார்பில் சிரீதரன்-தன் வண்டு உலவு தண் துழாய்த்
தார்-தன்னைச் சூடித் தரித்து. 62

தரித்திருந்தேன், ஆகவே—தாராகணப் போர்
விரித்து உரைத்த வெம் நாகத்து உன்னைத் தெரிந்து, எழுதி,
வாசித்தும், கேட்டும், வணங்கி வழிபட்டும்,
பூசித்தும், போக்கினேன் போது. 63

போதான இட்டு, இறைஞ்சி, ஏத்துமினோ—பொன் மகரக்
காதானை, ஆதிப் பெருமானை, நாதானை,
நல்லானை, நாரணனை, நம் ஏழ் பிறப்பு அறுக்கும்
சொல்லானை—சொல்லுவதே சூது. 64

சூது ஆவது என் நெஞ்சத்து எண்ணினேன் : சொல்-மாலை
மாது ஆய மாலவனை, மாதவனை, யாதானும்
வல்லவா சிந்தித்திருப்பேற்கு, வைகுந்தத்து
இல்லையோ, சொல்லீர்—இடம் ? 65

இடம் ஆவது என் நெஞ்சம் இன்றெல்லாம்—பண்டு,
பட நாகணை நெடிய மாற்கு : திடமாக
வையேன் மதிசூடி-தன்னோடு அயனை ; நான்
வையேன், ஆட்செய்யேன்—வலம். 66

வலம் ஆக, மாட்டாமை-தான் ஆக, வைகல்
குலம் ஆக, குற்றம்-தான் ஆக, நலம் ஆக—
நாரணனை, நா-பதியை, ஞானப் பெருமானை,
சீரணனை ஏத்தும் திறம். 67

திறம்பேல்மின் கண்டீர் ; திருவடி-தன் நாமம்
மறந்தும், புறம் தொழா மாந்தர் இறைஞ்சியும்,
சாதுவராய்ப் போதுமின்கள் என்றான் நமனும்—தன்
தூதுவரைக் கூவிச் செவிக்கு. 68

செவிக்கு இன்பம் ஆவதுவும் செங்கண் மால் நாமம் ;
புவிக்கும் புவி-அதுவே கண்டீர் ; கவிக்கு
நிறை பொருளாய் நின்றானை நேர்பட்டேன் ; பார்க்கில்,
மறைப் பொருளும் அத்தனையேதான். 69

தான் ஒருவன் ஆகி, தரணி இடந்து எடுத்து,
ஏன் ஒருவனாய், எயிற்றில் தாங்கியதும், யான் ஒருவன்
இன்றா அறிகின்றேன் அல்லேன்—இரு நிலத்தைச்
சென்று, ஆங்கு அடிப்படுத்த சேய். 70

சேயன், அணியன், சிறியன், மிகப் பெரியன்,
ஆயன், துவரைக் கோனாய் நின்ற மாயன், அன்று
ஓதிய வாக்கு-அதனைக் கல்லார், உலகத்தில்
ஏதிலர் ஆம், மெய்ஞ் ஞானம் இல். 71

இல்லறம், அல்லேல் துறவறம், இல் என்னும்
சொல், அறம் அல்லனவும்—சொல் அல்ல : நல்லறம்
ஆவனவும், நால் வேத மாத் தவமும் நாரணனே
ஆவது : ஈது அன்று என்பார் ஆர் ? 72

ஆரே அறிவார்—அனைத்து உலகும் உண்டு உமிழ்ந்த
பேர் ஆழியான்-தன் பெருமையை ? கார் செறிந்த
கண்டத்தான், எண் கண்ணன் காணான்—அவன் வைத்த
பண்டைத் தானத்தின் பதி. 73

பதிப் பகைஞற்கு ஆற்றாது, பாய் திரை நீர்ப் பாழி
மதித்து அடைந்த வாள்அரவம்-தன்னை மதித்து, அவன்-தன்
வல் ஆகத்து ஏற்றிய மா மேனி மாயவனை
அல்லாது, ஒன்று ஏத்தாது—என் நா. 74

நாக் கொண்டு மானிடம் பாடேன்—நலம் ஆக,
தீக் கொண்ட செஞ்சடையான் சென்று, என்றும் பூக் கொண்டு
வல்லவாறு ஏத்த, மகிழாத வைகுந்தச்
செல்வனார் சேவடிமேல் பாட்டு. 75

பாட்டும், முறையும், படு கதையும், பல் பொருளும்,
ஈட்டிய தீயும், இரு விசும்பும், கேட்ட
மனுவும் சுருதி மறை நான்கும், மாயன்-
தன மாயையில் பட்ட தற்பு. 76

தற்பு என்னைத் தான் அறியானேலும், தடங் கடலைக்
கல் கொண்டு தூர்த்த கடல் வண்ணன், என் கொண்ட
வெவ்வினையும் நீங்க, விலங்கா மனம் வைத்தான்—
எவ் வினையும் மாயுமால்—கண்டு. 77

கண்டு வணங்கினார்க்கு என்னாம்கொல்—காமன் உடல்
கொண்ட தவத்தாற்கு உமை உணர்த்த, வண்டு அலம்பும்
தார் அலங்கல் நீள் முடியான்-தன் பெயரே கேட்டிருந்து அங்கு
ஆர் அலங்கல் ஆனமையால் ஆய்ந்து ? 78

ஆய்ந்துகொண்டு ஆதிப் பெருமானை, அன்பினால்,
வாய்ந்த மனத்து இருத்த வல்லார்கள் ஏய்ந்த தம்
மெய் குந்தம் ஆக விரும்புவரே—தாமும் தம்
வைகுந்தம் காண்பார் விரைந்து. 79

விரைந்து அடைமின்—மேல் ஒரு நாள் வெள்ளம் பரக்க,
கரந்து உலகம், காத்து அளித்த கண்ணன்: பரந்து, உலகம்
பாடின ஆடின கேட்டு, படு நரகம்
வீடின—வாசற் கதவு. 80

கதவு மனம் என்றும், காணலாம் என்றும்,
குதையும் வினை ஆவி தீர்ந்தேன்; விதை ஆக
நல்-தமிழை வித்தி, என் உள்ளத்தை நீ விளைத்தாய்—
கற்ற மொழி ஆகிக் கலந்து. 81

கலந்தான் என் உள்ளத்து—காம வேள் தாதை;
நலம்-தானும் ஈது ஒப்பது உண்டே? அலர்ந்தலர்கள்
இட்டு ஏத்தும் ஈசனும், நான்முகனும் என்றிவர்கள்
விட்டு ஏத்த மாட்டாத வேந்து. 82

வேந்தர் ஆய், விண்ணவர் ஆய், விண் ஆகி, தண்ணளி ஆய்,
மாந்தர் ஆய், மாது ஆய், மற்று எல்லாம் ஆய், சார்ந்தவர்க்குத்
தன் ஆற்றான், நேமியான், மால் வண்ணன்-தான் கொடுக்கும்
பின்னால்—தான் செய்யும் பிதிர். 83

பிதிரும் மனம் இலேன்; பிஞ்ஞகன்-தன்னோடு
எதிர்வன்; அவன் எனக்கு நேரான்; அதிரும்
கழற் கால மன்னனையே, கண்ணனையே, நாளும்
தொழக் காதல் பூண்டேன், தொழில். 84

தொழில் எனக்குத் தொல்லை மால்-தன் நாமம் ஏத்த;
பொழுது, எனக்கு மற்று அதுவே, போதும்; கழி சினத்த
வல்லாளன், வானரக் கோன், வாலி மதன் அழித்த
வில்லாளன், நெஞ்சத்து உளன். 85

உளன் கண்டாய் ; நல் நெஞ்சே! உத்தமன் என்றும்
உளன் கண்டாய் ; உள்ளுவார் உள்ளத்து உளன் கண்டாய் ;
தன் ஒப்பான் தான் ஆய் உளன் காண்—தமியேற்கும்,
என் ஒப்பார்க்கு ஈசன், இமை. 86

இமயப் பெரு மலை போல் இந்திரனார்க்கு இட்ட
சமய விருந்து உண்டு, ஆர் காப்பார்—சமயங்கள்
கண்டான், அவை காப்பான், கார்க்கண்டன் நான்முகனோடு,
உண்டான் உலகோடு உயிர் ? 87

உயிர் கொண்டு, உடல் ஒழிய, ஓடும்போது ஓடி,
அயர்வு என்ற தீர்ப்பான் பேர் பாடி, செயல் தீரச்
சிந்தித்து வாழ்வாரே—வாழ்வார் : சிறு சமயப்
பந்தனையார் வாழ்வேல், பழுது. 88

பழுது ஆகாது ஒன்று அறிந்தேன் : பாற்கடலான் பாதம்
வழுவாவகை நினைந்து, வைகல் தொழுவாரைக்
கண்டு இறைஞ்சி வாழ்வார் கலந்த வினை கெடுத்து,
விண் திறந்து வீற்றிருப்பார், மிக்கு. 89

வீற்றிருந்து விண் ஆள வேண்டுவார் வேங்கடத்தான்-
பால் திருந்த வைத்தாரே பல் மலர்கள் ; மேல் திருந்தி
வாழ்வார்—வரும் மதி பார்த்து, அன்பினராய், மற்று அவற்கே
தாழ்வாய் இருப்பார் தமர். 90

தமர் ஆவார்—யாவர்க்கும், தாமரைமேலாற்கும்,
அமரர்க்கும், ஆடு அரவு ஆர்த்தாற்கும், அமரர்கள் :
தாள்-தாமரை மலர்கள் இட்டு இறைஞ்சி, மால் வண்ணன்
தாள்-தாமரை அடைவோம் என்று. 91

என்றும் மறந்தறியேன்—என் நெஞ்சத்தே வைத்து,
நின்றும் இருந்தும், நெடுமாலை, என்றும்
திரு இருந்த மார்பன் சிரீதரனுக்கு ஆளாய்,
கரு இருந்த நாள் முதலாக் காப்பு. 92

காப்பு மறந்தறியேன் ; கண்ணனே என்று இருப்பன் ;
ஆப்பு அங்கு ஒழியவும் பல் உயிர்க்கும் ஆக்கை
கொடுத்து அளித்த கோனே! குணப்பரனே! உன்னை
விடத் துணியார்—மெய் தெளிந்தார்-தாம். 93

மெய் தெளிந்தார் என் செய்யார் ?—வேறு ஆனுர் நீறு ஆக,
கை தெளிந்து காட்டிக் களப்படுத்து, பை தெளிந்த
பாம்பின் அணையாய்! அருளாய் அடியேற்கு,
வேம்பும் கறி ஆகும் என்று. 94

என்றேன் அடிமை ; இழிந்தேன் பிறப்பு இடும்பை ;
ஆன்றேன் அமரர்க்கு அமராமை ; ஆன்றேன்—
கடன் நாடும் மண் நாடும் கைவிட்டு, மேலை
இடம் நாடு காண, இனி. 95

இனி அறிந்தேன் ஈசற்கும் நான்முகற்கும் தெய்வம் ;
இனி அறிந்தேன் எம் பெருமான்! உன்னை இனி அறிந்தேன் :
காரணன் நீ ; கற்றவை நீ ; கற்பவை நீ ; நல் கிரிசை
நாரணன் நீ—நன்கு அறிந்தேன் நான். 96

நான்காம் திருவந்தாதி முற்றும்

ஸ்ரீ :

சடகோபர் அருளிச்செய்த

திருவிருத்தம்

விண்ணப்பம்

பொய்ந் நின்ற ஞானமும், பொல்லா ஒழுக்கும், அழுக்கு உடம்பும்,
இந் நின்ற நீர்மை இனி யாம் உறாமை—உயிர் அளிப்பான்,
எந் நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய்! இமையோர் தலைவா!—
மெய்ந் நின்று கேட்டருளாய், அடியேன் செய்யும் விண்ணப்பமே. 1

தலைவியின் வேறுபாடு கண்ட தோழி வியந்து, உரைத்தல்

செழு நீர்த் தடத்துக் கயல் மிளிர்ந்தால் ஒப்ப, சேயரிக் கண்
அழு நீர் துளும்ப, அலமருகின்றன, வாழியரோ!—
முழு நீர் முகில் வண்ணன், கண்ணன், விண் நாட்டவர் மூதுவர் ஆம்
தொழு நீர் இணை-அடிக்கே அன்பு சூட்டிய சூழ் குழற்கே. 2

பிரிவு ஆற்றாத தலைவி நெஞ்சு அழிந்து, உரைத்தல்

குழல்-கோவலர் மடப் பாவையும், மண்மகளும், திருவும்
நிழல்போல்வனர் கண்டு நிற்கும்கொல், மீளும்கொல்—தண் அம் துழாய்
அழல் போல் அடும் சக்கரத்து அண்ணல், விண்ணோர் தொழ, கடவும்
தழல் போல் சினத்த அப் புள்ளின் பின் போன தனி நெஞ்சமே? 3

தலைவனைப் பிரிந்த தலைவி வாடைக்கு ஆற்றாது, வருந்திக் கூறுதல்

தனி நெஞ்சம் முன் அவர் புள்ளே கவர்ந்தது; தண் அம் துழாய்க்கு
இனி நெஞ்சம் இங்குக் கவர்வது யாம் இலம்; நீ நடுவே,
முனி வஞ்சப் பேய்ச்சி முலை சுவைத்தான் முடி சூடு துழாய்ப்
பனி நஞ்ச மாருதமே! எம்மது ஆவி பனிப்பு இயல்வே? 4

வாடைக்கு நலிந்த தலைவியின் மாமை கண்டு, தோழி இரங்குதல்

பனிப்பு இயல்வாக உடைய தண் வாடை இக் காலம் இவ் ஊர்ப்
பனிப்பு இயல்வு எல்லாம் தவிர்ந்து, எரி வீசும்; அம் தண்ணம் துழாய்ப்
பனிப் புயல் சோரும் தடங் கண்ணி மாமைத் திறத்துக்கொலாம்—
பனிப் புயல் வண்ணன் செங்கோல் ஒருநான்று தடாவியதே! 5

தலைவியின் எழில் நலம் கண்டு, வியந்த தலைவனது கூற்று

தடாவிய அம்பும், முரிந்த சிலைகளும் போகவிட்டு,
கடாயின கொண்டு, ஒல்கும் வல்லி ஈது ஏனும், அசுரர் மங்கக்
கடாவிய வேகப் பறவையின் பாகன் மதன செங்கோல்
நடாவிய கூற்றம் கண்டீர்! உயிர் காமின்கள், ஞாலத்துள்ளே! 6

கால மயக்கு

ஞாலம் பனிப்பச் செறுத்து, நல் நீர் இட்டு, கால் சிதைந்து,
நீல வல் ஏறு பொராநின்ற வானம் இது; திருமால்
கோலம் சுமந்து, பிரிந்தார் கொடுமை குழறு தண் பூங்
காலம் கொலோ? அறியேன்—வினையாட்டியேன் காண்கின்றவே! 7

தலைவன் பொருள்வயின் பிரிதலைக் குறிப்பால் அறிந்த தலைவி தோழிக்கு உரைத்தல்

காண்கின்றனகளும் கேட்கின்றனகளும் காணில், இந் நாள்
பாண் குன்ற நாடர் பயில்கின்றன இது எல்லாம், அறிந்தோம்—
மாண் குன்றம் ஏந்தி தண் மா மலை வேங்கடத்து உம்பர் நம்பும்
சேண் குன்றம் சென்று பொருள்படைப்பான், கற்ற திண்ணனவே. 8

தலைவன் தலைவியின் நீங்கலருமை கூறல்

திண் பூஞ் சுடர் நுதி நேமி அம் செல்வர் விண்-நாடு அனைய
வண் பூ மணி வல்லி! யாரே பிரிபவர் தாம்? இவையோ
கண்—பூங் கமலம் கருஞ் சுடர் ஆடி, வெண் முத்து அரும்பி,
வண் பூங் குவளை மட மான் விழிக்கின்ற, மா இதழே. 9

மதி உடம்படுத்தலுற்ற தலைவன் குறையுற உரைத்தல்

மாயோன் வட திருவேங்கட நாட வல்லிக்கொடிகாள்!
நோயோ உரைக்கிலும் கேட்கின்றிலீர்; உரையீர்—நுமது
வாயோ? அது அன்றி வல்வினையேனும் கிளியும் எள்கும்
ஆயோ? அடும்—தொண்டையோ? அறையோ! இது அறிவு-அரிதே.

பிரிவு ஆற்றாத தலைவியின் வேறுபாடு கண்டு, தலைவன் உரைத்தல்

அரியன, யாம் இன்று காண்கின்றன: கண்ணன் விண் அனையாய்!
பெரியன காதம் பொருட்கோ பிரிவு என—ஞாலம் எய்தற்கு
உரியன ஒண் முத்தும் பைம் பொன்னும் ஏந்தி, ஓரோ குடங்கைப்
பெரியன கெண்டைக் குலம் இவையோ வந்து பேர்கின்றவே! 11

தலைவி நெஞ்சொடு கலாய்த்து, தன் ஆற்றாமை கூறுதல்

பேர்கின்றது மணி மாமை; பிறங்கி அள்ளல் பயலை
ஊர்கின்றது; கங்குல் ஊழிகளே; இது எல்லாம் இனவே—
ஈர்கின்ற சக்கரத்து எம் பெருமான் கண்ணன் தண் அம் துழாய்
சார்கின்ற நல் நெஞ்சினார் தந்து போன தனி வளமே. 12

பிரிவு ஆற்றாத தலைவி இருளுக்கும் வாடைக்கும் இரங்குதல்

தனி வளர் செங்கோல் நடாவு தழல் வாய் அரசு அவிய,
பனி வளர் செங்கோல் இருள் வீற்றிருந்தது பார் முழுதும்;
துனி வளர் காதல்-துழாயைத் துழாவு தண் வாடை தடிந்து,
இனி வளை காப்பவர் ஆர்? எனை ஊழிகள் ஈர்வனவே! 13

நலம் பாராட்டு

ஈர்வன வேலும், அம் சேலும் உயிர்மேல் மிளிர்ந்து, இவையோ
பேர்வனவோ அல்ல; தெய்வ நல் வேள் கணைப் பேர் ஒளியே
சோர்வன; நீலச் சுடர் விடு மேனி அம்மான் விசும்பு ஊர்
தேர்வன; தெய்வம் அன்னீர கண்ணே, இச் செழுங் கயலே? 14

தோழி தலைவனது கருத்து அறிந்து, உரைத்தல்

கயலோ நும கண்கள்? என்று, களிறு வினவி, நிற்றீர்;
அயலோர் அறியிலும் ஈது என்ன வார்த்தை? கடல் கவர்ந்த
புயலோடு உலாம் கொண்டல் வண்ணன் புன வேங்கடத்து எம்மொடும்
பயலோ இலீர்; கொல்லை காக்கின்ற நாளும் பல பலவே. 15

தலைவனைப் பிரிந்த தலைவி பாங்கியை நோக்கி, இருள் வியந்து, உரைத்தல்

பலபல ஊழிகள் ஆயிடும்; அன்றி ஓர் நாழிகையைப்
பலபல கூறிட்ட கூறு ஆயிடும்; கண்ணன் விண் அனையாய்!—
பலபல நாள் அன்பர் கூடிலும், நீங்கிலும்—யாம் மெலிதும்;
பலபல சூழல் உடைத்து, அம்ம! வாழி, இப் பாய் இருளே! 16

தலைவி கடலை நோக்கி, தேர் வழி தூரல் என்றல்

இருள் விரிந்தால் அன்ன மா நீர்த் திரைகொண்டு, வாழியரோ!—
இருள் பிரிந்தார் அன்பர் தேர் வழி தூரல்: அரவு-அணைமேல்
இருள் விரி நீலக் கரு நாயிறு சுடர் கால்வது போல்
இருள் விரி சோதிப் பெருமான் உறையும் எறி கடலே! 17

கார் கண்டு அழிந்த தலைவியின் ஆற்றாமை கண்டு, பாங்கி இரங்குதல்

கடல் கொண்டு எழுந்தது வானம்; அவ் வானத்தை அன்றிச் சென்று
கடல் கொண்டு ஒழிந்த அதனால், இது கண்ணன் மண்ணும் விண்ணும்
கடல் கொண்டு எழுந்த அக் காலம்கொலோ? புயல்-காலம்கொலோ?
கடல் கொண்ட கண்ணீர் அருவிசெய்யாநிற்கும் காரிகையே! 18

செவிலி பழிக்கு இரங்குதல்

காரிகையார் நிறை காப்பவர் யார் என்று, கார் கொண்டு, இன்னே
மாரி கை ஏறி, அறையிடும் காலத்தும், வாழியரோ!
சாரிகைப் புள்ளர் அம் தண்ணம் துழாய் இறை கூய் அருளார்;
சேரி கை ஏறும் பழியாய் விளைந்தது என் சில்மொழிக்கே. 19

வெறி விலக்கு

சில்மொழி நோயோ கழி பெருந் தெய்வம்; இந் நோய் இனது என்று
இல் மொழி கேட்கும் இளந் தெய்வம் அன்று இது; வேல! நில் நீ;
என் மொழி கேள்மின், என் அம்மனைமீர்! உலகு ஏழும் உண்டான்
சொல்-மொழி, மாலை அம் தண்ணம் துழாய் கொண்டு, சூட்டுமினே.

ஏறுகோள் கூறி, வரைவு கடாதல்

சூட்டு நல் மாலைகள் தூயன ஏந்தி, விண்ணோர்கள் நல் நீர்
ஆட்டி, அம் தூபம் தராநிற்கவே, அங்கு ஓர் மாயையினால்,
ஈட்டிய வெண்ணெய் தொடு உண்ணப் போந்து, இமில் ஏற்று வன் கூன்
கோட்டிடை ஆடினை கூத்து—அடல் ஆயர்-தம் கொம்பினுக்கே. 21

தோழி தலைவனை நகையாடுதல்

கொம்பு ஆர் தழை கை; சிறு நாண் எறிவு இலம்; வேட்டை கொண்டாட்டு;
அம்பு ஆர் களிறு வினவுவது, ஐயர்—புள் ஊரும் கள்வர்-
தம் பாரகத்து என்றும் ஆடாதன; தம்மில் கூடாதன:
வம்பு ஆர் வினைச் சொல்லவோ—எம்மை வைத்தது, இவ் வான் புனத்தே?

தலைவன் குறையுற உரைத்தல்

புனமோ? புனத்து அயலே வழிபோகும் அரு வினையேன்
மனமோ? மகளிர்! நும் காவல் சொல்லீர்; புண்டரீகத்து அம் கேழ்
வனம் ஓர் அனைய கண்ணான், கண்ணன் வான் நாடு அமரும் தெய்வத்து
இனம் ஓர் அனையீர்களாய், இவையோ நும் இயல்வுகளே? 23

பிரிவு ஆற்றாத தலைவியின் ஈடுபாடு கண்ட செவிலி இரங்குதல்

இயல்வாயின வஞ்ச நோய் கொண்டு, உலாவும் ஓரோ குடங்கைக்
கயல் பாய்வன பெரு நீர்க் கண்கள்-தம்மொடும், குன்றம் ஒன்றால்
புயல்வாய் இன நிரை காத்த புள்-ஊர்தி கள் ஊரும் துழாய்க்
கொயல்வாய் மலர்மேல் மனத்தொடு என்னும்கொல் எம் கோல்-வளைக்கே?

தலைவனது தாரில் ஈடுபட்ட தலைவி ஆற்றாது கூறுதல்

எம் கோல் வளை முதலா, கண்ணன் மண்ணும் விண்ணும் அளிக்கும்
செங்கோல் வளைவு விளைவிக்குமால் ; திறல் சேர் அமரர்-
தம் கோனுடைய தம் கோன் உம்பர் எல்லா எவர்க்கும் தம் கோன்
நம் கோன் உகக்கும் துழாய் என் செய்யாது, இனி நானிலத்தே ? 25

நகர் காட்டுதல்

நானிலம் வாய்க் கொண்டு, நல் நீர் அற மென்று, கோது கொண்ட
வேனில்அம் செல்வன் சுவைத்து உமிழ் பாலை கடந்த பொன்னே!
கால் நிலம் தோய்ந்து, விண்ணோர் தொழும் கண்ணன் வெஃகா உது; அம் பூந்
தேன் இளஞ் சோலை அப்பாலது—எப்பாலைக்கும் சேமத்ததே. 26

தலைவி தார் பெற்று, மகிழ்தல்

சேமம் செங்கோன் அருளே ; செறுவாரும் நட்பு ஆகுவர் என்று,
ஏமம் பெற, வையம் சொல்லும் மெய்யே ; பண்டு எல்லாம் அறை கூய்,
யாமங்கள் தோறு எரி வீசும் நம் கண்ணன் அம் தண்ணம் துழாய்த்
தாமம் புனைய, அவ் வாடை ஈதோ வந்து, தண்ணென்றதே. 27

தலைவனைப் பிரிந்த தலைவி வாடைக்கு வருந்தி, இரங்குதல்

தண் அம் துழாய் வளை கொள்வது ; யாம் இழப்போம் ; நடுவே
வண்ணம் துழாவி, ஓர் வாடை உலாவும் ; வள் வாய் அலகால்
மறை முனிவர்க்கு ' அஞ்சேல்மின் ' என்று அருள் கொடுத்து ; வெங் கண் விறல் விராதன் உக, வில் குனித்து; வண் தமிழ் மா முனி கொடுத்த வரி வில் வாங்கி ; புலர்ந்து எழுந்த காமந்தால், ' சீதைக்கு நேர் ஆவன் ' என்ன, பொன் நிறம் கொண்ட சுடு சினத்த சூர்ப்பணகி கொடி மூக்கும் காது இரண்டும் கூர் ஆர்ந்த வாளால் ஈரா விடுத்து ; கரனோடு தூடணன்-தன் உயிரை வாங்கி ; அவள் கதறி, தலையில் அம் கை வைத்து, மலை இலங்கை ஓடிப் புக ; கொடுமையின் கடு விசை அரக்கன், அலை மலி வேல்கணளை அகல் விப்பான், ஓர் உரு ஆய மானை அமைத்து, செங்கல் பொடிக் கூறை, சிற்றெயிற்று, முற்றல் மூங்கில் மூன்று தண்டத்தன் ஆய், வஞ்சித்து, இலைக் குரம்பில் தனி இருப்பில் கனி வாய்த் திருவினைப் பிரித்து, நீள் கடல் சூழ் இலங்கையில் அரக்கர் குடிக்கு நஞ்சு ஆகக் கொண்டு போய், வம்பு உலாம் கடி காவில் சிறையா வைக்க ; அயோத்தியர் கோன் மாய மான் மாயச் செற்று ; அலை மலி வேல்-கண்ணளை அகன்று, தளர்வு எய்தி ; சடாயுவை வைகுந்தத்து ஏற்றி ; கங்குலும் பகலும் கண் துயில் இல்லாக் கானகம் படி உலாவி உலாவி ; கணை ஒன்றினால் கவந்தனை மடித்து ; சவரி தந்த கனி உவந்து :

வன மருவு கவி அரசன் காதல் கொண்டு ; மரா மரம் ஏழ் எய்து ; உருத்து எழு வாலி மார்பில் ஒரு கணை உருவ ஓட்டி ; கருத் துடைத் தம்பிக்கு இன்பக் கதிர்முடி அரசு அளித்து ; வானரக் கோனுடன் இருந்து, வைதேகி-தனைத் தேட விடுத்த திசைக் கருமம் திருத்த, திறல் விளங்கு மாருதியும் மாயோன் தூது உரைத்தல் செப்ப :

சீர் ஆரும் திறல் அனுமன் மா கடலைக் கடந்து ஏறி, மும் மதில் நீள் இலங்கை புக்கு, கடி காவில் வார் ஆரும் முலை மடவாள் வைதேவி-தனைக் கண்டு, ' நின் அடியேன் விண்ணப்பம் கேட்

டருளாய் : அயோத்தி-தனில் ஓர் இடவகையில் எல்லியம்போது இனிது இருத்தல், மல்லிகை மா மாலை கொண்டு அங்கு ஆர்த்ததும் ; கலக்கிய மா மனத்தனள் ஆய்க் கைகேசி வரம் வேண்ட, மலக்கிய மா மனத்தனன் ஆய் மன்னவனும் மறுது ஒழிய, 'குலக் குமரா! காடு உறையப் போ' என்று விடை கொடுப்ப, இலக்குமணன்-தன்னொடும் அங்கு ஏகியதும் ; கங்கை-தன்னில் கூர் அணிந்த வேல் வலவன் குகனோடு சீர் அணிந்த தோழமை கொண்டதுவும் ; சித்திரகூடத்து இருப்பப் பரதநம்பி பணிந்ததுவும் ; சிறு காக்கை முலை தீண்டி மூவுலகும் திரிந்து ஓடி, "வித்தகனே ! இராமா ! ஓ ! நின் அபயம்" என்ன, அத்திரமே அதன் கண்ணை அறுத்ததுவும் ; பொன் ஒத்த மான் ஒன்று புகுந்து, இனிது விளையாட, நின் அன்பின் வழிநின்று, சிலை பிடித்து, எம்பிரான் ஏக, பின்னே அங்கு இலக்குமணன் பிரிந்ததுவும் ; அயோத்தியர்-கோன் உரைத்த அடையாளம், ஈது அவன் கை மோதிரமே' என்று அடையாளம் தெரிந்து உரைக்க, மலர்க் குழலாள் சீதையும் வில் இறுத்தான் மோதிரம் கொண்டு, 'அனுமான் ! அடையாளம் ஒக்கும்' என்று உச்சிமேல் வைத்து உகக்க, திறல் விளங்கு மாருதியும் இலங்கையர்-கோன் மாக் கடி காவை இறுத்து, காதல் மக்களும் சுற்றமும் கொன்று, கடி இலங்கை மலங்க எரித்து, அரக்கர் - கோன் சினம் அழித்து, மீண்டு, அன்பினால் அயோத்தியர் - கோன் தளிர் புரையும் அடி-இணை பணிய :

கான எண்கும் குரங்கும் முசுவும் படையா, கொடியோன் இலங்கை புகல் உற்று ; அலை ஆர் கடற்கரை வீற்றிருந்து ; செல்வ விபீடணற்கு நல்லன் ஆய் ; விரி நீர் இலங்கை அருளி ; சரண் புக்க குரை கடலை அடல் அம்பால் மறுக எய்து ; கொல்லை விலங்கு பணி செய்ய, மலையால் அணை கட்டி ; மறு கரை ஏறி ; இலங்கை பொடி ஆக, சிலை மலை செஞ் சரங்கள் செல உய்த்து ; கும்பனோடு நிகும்பனும் பட, இந்திரசித்து அழிய, கும்பகர்ணன் பட, அரக்கர் ஆவி மாள, அரக்கர் கூத்தர்போலக் குழுமணிதூரம் ஆட, இலங்கை மன்னன் முடி ஒருபதும், தோள் இருபதும் போய் உதிர, சிலை வளைத்து ; சர மழை பொழிந்து ; கரம் துணித்து ; வென்றி கொண்ட செருக்களத்துக் கடிக் கமல நான்முகனும், கண்மூன்றத்தானும், எண்மர், பதினொருவர், ஈர்அறுவர், ஓர்இருவர், மற்றும் உள்ள வானவர் மலர்மழை பொழிந்து, மணி முடி பணிதர, அடி-இணை வணங்க, கோலத் திரு மா மகளோடு, செல்வ விபீடணன், வானரக் கோனுடன் இலங்கு மணி நெடுந் தேர் ஏறி ; சீர் அணிந்த குகனோடு

கூடி ; அங்கண் நெடு மதில் புடைசூழ் அயோத்தி எய்தி ; நல் நீர் ஆடி ; பொங்கு இள ஆடை அரையில் சாத்தி ; திருச் செய்ய முடியும், ஆரமும், குழையும் முதலா மேதகு பல்கலன் அணிந்து ; சூட்டு நன் மாலைகள் அணிந்து ; பரதனும், தம்பி சத்துருக்கனனும், இலக்குமனனும், இரவும் நன் பகலும், ஆட்செய்ய, வடிவு இணை இல்லாச் சங்கு தங்கு முன் கை நங்கை மலர்க் குழலாள் சீதையும், தானும் கோப்புடைய சீரிய சிங்காசனத்து இருந்து ; ஏழ் உலகும் தனிக் கோல் செல்ல வாழ்வித்தருளினார்.

ஸ்ரீ:

திவ்யப் பிரபந்தக் கதைக் குறிப்புக்கள்

1. அவதாரக் கதைகள்

மச்சாவதாரம் (ஒரு மீன் உரு ஆகி)

வானமும், நிலனும், மலைகளும், அலை கடல் குளிப்ப; அம் முது முந்நீர் வளர்ந்து, உம்பர் வள நாடு மூட; உலகம் எலாம் நெடு வெள்ளம் கொண்ட காலம்; நிலையிடம் எங்கும் இன்றி, இமையோர் சரண் புக; திருமால், தான் ஒரு மீன் உரு ஆய், நீர் குழம்ப உலாவி, குல வரையின் மீது ஓடி, அகல் வான் உரிஞ்ச, அண்டத்து அப்பால் எழுந்து, இனிது விளையாடி; வியந்து, உயிர் அளித்து, உய்யக் கொண்டான்.

கூர்மாவதாரம் (ஓர் ஆமையும் ஆகி)

மந்தர மலையை மத்தாக நாட்டி; வாசுகியை வன் கயிறாகச் சுற்றி; கடல் மறுகக் கடைந்த காலம், அமரர்கள் தொழுது எழ; அமுதம் எய்தும் அளவும், தடங் கடலுள் கார் ஆமை ஆய், பரு வரை முதுகில் சுழலத் தாங்கி; மேலும், ஆயிரம் தோளால் திசையும், விண்ணும் வெருவ, மா நிலம் குலுங்க, வெள்ளை வெள்ளம் நீலக் கடல் ஆகி முழுதும் குழம்பி அலற, கடல்வண்ணன், தானே அமுது எழ, கடல் கடைந்தான்.

விஞ்சை வானவர், சாரணர், சித்தர், வியந்து துதிசெய்ய; மாயப் பிரான், தானே பெண் உரு ஆய், அவுணரை வஞ்சித்து, உள்ள நோய் தீர் மருந்தாக அமுதினை அமரர்க்கு அருளினான்.

கடைந்த அமுதை விண்ணவர் உண்ண, கிடந்த அமுதாகிய பெருமான் அமுதினில் வந்த மின் ஒத்த பெண் அமுதைத் தன் மார்வில் மன்ன வைத்து உகந்தான்.

அலை கடல் கடைந்த அப்பொழுது, தன் கூறு கொண்ட தழல் நிற வண்ணன் நஞ்சு உண்ணக் கண்டான்.

வராகாவதாரம் (பன்றியும் ஆகி)

ஆழப் பெரும்புனல்-தன்னுள் அழுந்திய நில-மடந்தை பொருட்டு, தரணித் தலைவன், வென்றிசேர் திண்மை விலங்கல் மா மேனி வெள் எயிற்று ஒள் எரித் தறுகண் பன்றி ஆனான்.

'சிலம்பினிடைச் சிறு பரல்போல், பெரிய மேரு திருக்குளம்பில் கணகணப்ப, திரு ஆகாரம் குலுங்க, சிலம்பு முதல் கலன் அணிந்து, ஓர் செங்கல் குன்றம் திகழ்ந்தது' எனத் தோன்றி, இமையவர் வணங்க நின்று, மண் எல்லாம் இடந்து, இலங்கு புவி மடந்தை தனைப் புல்கி, எயிற்றிடை வைத்து, அம் மடவரலை மணந்து உகந் தான்.

நரசிங்காவதாரம் (ஓர் ஆள்-அரி உருவம் ஆகி)

எல்லையிலாத தவமும் வரமும் கருதி, அல்லல் செய்த இரணிய னுக்கு அஞ்சி; இமையோர் இறைவனை அடைந்து; 'வணங்கா முடியன் உன்னை இகழ்ந்தான்; மூர்க்கன் செயலால் தளர்ந்தோம்; சரண் தா' என்ன, 'அரண் ஆவோம்; முரண் ஆனவனை முடிப் போம்' என்றான்.

பொன்பெயரோன் பள்ளியில் ஓதி வந்த தன் சிறுவன் இறை வனது ஆயிர நாமம் ஓத, பொறாது, பிள்ளையைச் சீறி வெகுண்டு, தூண் புடைத்தான்.

அளந்திட்ட தூணை அவன் தட்ட, ஆங்கே, வளர்ந்திட்டது ஓர் ஆள்-அரி. அதுகண்ட பொன்னன், வயிறு அழல, வாள் உருவி, எதிர்ந்தான். வாள் எயிற்றுக் கோளரியோ, ஏனோர் அஞ்ச, வெஞ் சமத்து எரி விழித்தது.

அப்பொழுது வானோர், 'எரிந்த பைங் கண், இலங்கு பேழ் வாய் எயிற்றொடு, இது எவ் உரு!' என்று கலங்கி, இரிந்து ஓட; நாத் தழும்ப, நான்முகனும் ஈசனும் முறையால் ஏத்த; அந்தியம்போதில், வந்த ஆள்-அரி; வன் நெஞ்சத்துக் கொலைக் கை அவுணன் உளம் தொட்டு; ஒண் மார்பு-அகலம் குருதி குழம்பி, எழ; கூர் உகிர் வாளால் பிளந்து; அவன் குலமகற்கு இன் அருள் கொடுத்தது.

வாமனாவதாரம்—திருவிக்கிரமாவதாரம் (ஒரு குறள் ஆய் ஓங்கி)

தனி முதலான சக்கரப் படைத் தலைவன், விண்ணவர் வேண்ட, அவர் தம் துயர் தீர, மிகு சிறு குறளாய்க் கோலம் கொண்டு, மண்ணிடை வந்து தோன்றினான்.

நீள் நிலா வெண்குடை வாணனார், அவுணர்க்கு நாயகன், மிக்க பெரும் புகழ், நீள் முடி வெந் திறல் மாவலியின் மங்கலம் சேர் பெரு வேள்விக்கு, காணி பேணும் மாணியாய், கண்டார் இரங்க, பொங்கு இலங்கு புரி நூலும் தோலும் தாழச் சென்று, 'மூவடி மண் இன்றே தா' என இரந்தான். 'தக்கது இது அன்று' என்று தானம் விலக்கிய சுக்கிரன் கண்ணைப் பொல்லாக் குறளன் துரும்பால்

கிளறி, வாட்டம் இலா மாவலி வண் கைக்கு, தன் ஆழித் தடக்கை தாழ, நீர் ஏற்றான்.

நீர் ஏற்றதும், அணி வளர் குறளன், அண்டம் ஊடுருவ, நிமிர்ந் தான்.

நின்றதோர் பாதம் நிலம் புதைப்ப, நீண்ட தோள் சென்று திசை அளப்ப, நெடு வான் அளவும் நீண்டான். வான் என்னும் கேடு இலா வான் குடைக்குத் தான் ஓர் மணிக் காம்பு எனத் திகழ்ந்தான்.

பின், இவ் உலகினில் பேர் இருள் நீங்க ; சுடர்த் தோள்கள் பல தழைத்து, எண் திசையும் சூழ ; இரு நிலனும், பெரு விசும்பும், தாரகையின் உலகும், தடவி, அதன் புறமும் விம்ம, வளர்ந்தான்.

பார் அகலம் திருவடியாக, பவனம் (வாயு மண்டலம்) மெய்யாக, திசைகள் எட்டும் தோளாக, அண்ட - முகடு திரு முடி யாக, பரந்து எங்கும் காட்சி தந்து, நின்றான். நின்று, சேவடியை நீட்டி, திசை நடுங்க, விண் துளங்க, அம்பரம் ஊடு அறுத்து, உலகு அளந்தான். ஓங்கி, உலகு அளந்த உத்தமனை நோக்கி, மாவலி மகன் நமுசி, 'வஞ்சித்தாய் ! என் இது மாயம்? என் அப்பன் அறிந்திலன்; முன்னைய வண்ணமே கொண்டு அளவாய் !' என்ன, அவனை வானில் சுழற்றினான் மின்னும் முடியன்.

கழல்-தலம் ஒன்றே நிலம் முழுது ஆயிற்று. ஒரு கழல் போய், எல்லா விசும்பும் நிழல் தர, நிறைந்தது. இடம் போதாது—என் கொலோ !

'எஞ்சிய ஒன்றும் தருக' என்று, மாவலியைப் பொன் இலங்கு திண் விலங்கு இட்டு, சிறை வைத்தான். நெடுமையால் உலகு ஏழும் பாங்காய் அளந்து, காணி முற்றும் கொண்ட மாயக் குறளன், 'வாமனன் மண் இது !' என மெய்ப்பித்து, 'மூவுலகு அளந்த சேவடியோய் !' என அமரரும், முனிவரும், தொண்டரும், தொழுது எழ நின்றான்.

பரசுராமாவதாரம் (முனிந்த முனி ஆகி)

வையகம் முழுதும் முறைகெடச் செய்த மற மன்னரை, முனி யாய் வந்து, முனிந்து ; மழுவே படையாக, மூ-எழுகால் அம் மன்னர் மணிமுடி பொடி படுத்து ; அரசு களைகட்டு ; அவர்-தம் குருதிப் புனல் குளித்து ; திருக் குலத்தில் இறந்தோர்க்குத் திருத்தி (திருப்தி) செய்து ; வையம் உய்வித்தான்.

செருக்களத்தே மன்னர் எலாம் திறல் அழிந்து, அவியச் செற்ற வேந்தன் (கார்த்த - வீரியன்) பகைத்து எதிர் நிற்க, அவன் சினத் தோள் ஆயிரமும் அழித்து, சிரம் துணித்தான்.

இராமாவதாரம் (சீற்றம் இலாத எம் அரசு ஆகி)

1. திருவவதாரம் : செங்கண் நெடுங் கருமுகிலை, தங்கள் தனி முதல்வனை, தேவர்கள் வேண்டி இரக்க, விண் முழுதும் உய்யக் கொண்ட வீரன், வெங் கதிரோன் குலத்துக்கு ஓர் விளக்காய், உலகு அனைத்தும் விளக்கும் சோதியாய், தசரதனுக்கும் கௌசலைக்கும் மா மகன் ஆனான். தசரதன் பெற்ற மரதக மணித் தடம் தாசரதி எனப் பெயர் பெற்றான்.

2. வேள்வி காத்தல் : மாமுனி (விசுவாமித்திரன்) வேள்வி காக்கச் செல்லும் நெறியில் வந்து எதிர்ந்தாள் வல் அரக்கர் குலப் பாவை, திண் திறலாள் தாடகை. அவள் உரம் உருவ, குருதி பொழிய, அடு சிலையில் சுடு சரம் துரந்து, அந் நீர்மையிலாளைத் தென் உலகம் ஏற்றுவித்தான்.

இடையூறு விளைத்த வல் அரக்கர் உயிர் உண்டு, மா முனி வேள்வி காத்து, அவ்விரதம் ஆட்டினான்.

3. வில் முறித்தல் : தக்க பெரும் புகழ்ச் சனகன் மிக்க பெருஞ் சபை நடுவே, ‘நல் நேரிழையோடு உடனுய வில்’ என்ன, செவ் வரி நல் கரு நெடுங் கண் சீதைக்காகி, சின விடையோன் (சிவபெருமான்) சிலை இறுத்து, சனகன் திரு மருகன் ஆயினான்.

4. பரசுராமனது செருக்கு அழித்தல் : ‘என் வில் வலி கண்டு போ’ என்று எதிர் வந்த பரசுராமனது வில்லொடு, தவத்தையும் முற்றும் வாங்கி, தனது ஆக்கினான்.

5. கான் புகுதல் : இளமையில் இராமன், விளையாட்டாக, கூனி கூன் சிதைய, கை வில்லால் உண்டை தெறித்தான். அது குறித்து வன்மம் கொண்டிருந்த கொடுங் கூனியின் கடுஞ் சொல் கேட்டு, கலங்கிய மனத்துச் சிறிய தாய் கைகேயி, கூற்றுத் தாய் ஆகி, தசரதனிடம் வரம் வேண்ட, மயங்கிய மனத்து மன்னவனும் மறாது ஒழிய, அரி-அணை ஏற இருந்தவனை, ‘நெடுங் கானம் படரப் போ’ என்றாள்.

இராமனும் சிற்றவை பணியால், முடி துறந்து ; கரியும், பரியும், பார் ஆளும் படர் செல்வமும், பரதநம்பிக்கு அருளி ; பூவை போலும் மெல்லியலும், இளங்கோவும், பின் தொடர ; தொல் கானம் நோக்கி எழுந்தான்.

பெற்ற தாய் பின் தொடர்ந்து, ‘எம் பிரான்’ என்று அழ ; சுற்றத்தாரொடு நகரம் எலாம் தொடர்ந்து புலம்ப ; இராமன் அவர்கள் வருத்தமும், தன் அருமையும், பாராது ; தந்தையின்

மெய்யுரை காக்க, வள நகர் துறந்து, கொடிய கான் தொடுத்த நெறி போனான்.

6. தசரதன் புலம்பல் : *தனயன் கான் புக, தசரதன், ' எம் இராமாவோ ! நன் மகனே ! கைகேசி சொல் கேட்டு, நான் உன்னை நன்றாக நானிலத்தை ஆள்வித்தேன் ! என் வெவ்வுரை கேட்டு எவ்வாறு நடந்தனை ? என் செய்கேன் ? வல் வினையேன் மனம் உருக்கும் மகனே! மெல் அணை மேல் இனிது துயின்ற நீ கல் அணை மேல் கண் துயிலக் கற்றனையோ !' என்றெல்லாம் புலம்பலுற்றான்.*

நன் மகன் மீதும், மெய்யுரை மீதும், ஒருங்கே காதல் கொண்டு, ' வா ' என்றும், ' போ ' என்றும், ' இன்னம் வந்து ஒருகால் கண்டு போ ' என்றும் முரண்படப் புலம்பினான்.

கானக வாழ்வின் இன்னல்களைத் தன் மனக் கண் முன் கண்டு, ' அரும் பாவி சொல் கேட்ட பெரும் பாவியேன் மகனே ! போகின்றாய் ; அந்தோ ! என் செய்கேன் ?' என்று கலங்குவான்.

' இது தகவோ ? சுமந்திரனே ! வசிட்டனே ! சொல்லீர் நீரே ' என்பான்.

' மகனையும் மருகியையும் வனத்தில் போக்கி, என்னையும் வானில் போக்கி, நின் மகன்மேல் பழி விளைத்திட்டு, என் பெற்றாய், கைகேசி ! நீயும் இரு நிலத்தில் இனிதாக இருக்கின்றாயே !' என்பான்.

இறுதியில், கானகம் சென்ற இராமனை நினைத்து, ' நீ துறந்த வள நகரைத் துறந்து, நானும் வானகமே மிக விரும்பிப் போகின்றேன், மனு குலத்தார்-தங்கள் கோவே !' என்று கதறினான்.

7. குகனோடு தோழமை : *இராமன் கங்கைக் கரையில் குகனைக் கண்டு, ' ஏழை, ஏதலன், கீழ்-மகன் ' என்று பாராது, இரங்கி, இன் அருள் புரிந்தான். ' சீதை உன் தோழி ' என்றும், ' உன் தம்பியாகிய இலக்குமணன் என் தம்பி ' என்றும், ' தோழன் நீ ' என்றும் கூறி, அக் கூர் அணிந்த வேல் வலவனுடன் சீர் அணிந்த தோழமை கொண்டான்.*

8. பரதனுக்குப் பாதுகை ஈந்தது : *சித்திரகூடத்து இருந்த போது, பரதநம்பி வந்து அடிபணிந்தான். அந் நம்பிக்குத் தன்னுடைய அடிநிலையும் (பாதுகையும்) அரசும் ஈந்தான்.*

9. விராதன் வதம் : *வரை நெடுந் தோளும், படை ஆர் திண் கையும், கொடிய கண்களும் ஆய் வந்த விராதன் மடிய வில் வளைத்தான்.*

10. அகத்திய முனிவரிடம் வில் வாங்கியது : வண் தமிழ் மா முனி கொடுத்த வரி வில் வாங்கிக் கொண்டான்.

11. சூர்ப்பணகையின் அங்க பங்கம் : மான் அமரும் மென் நோக்கி வைதேவி இன் துணை ஆக, கான் அமரும் கல் அதர் போய், காடு உறைந்த காலத்து ; தென் இலங்கையாட்டி, தீ அரக்கர் குலப் பாவை, மன்னன் இராவணன் நல் தங்கை, மலை போல் உருவினள், வாள் எயிறு மின் இலக ; ' நான் சீதைக்கு நேர் ஆவேன் !' என்று வந்தாள். அக் கரு மகள் பிலம் கொள் வாய் திறந்து, அடுத்து, ஆர்த்து எழுந்தாள். இவ்வாறு தன்மேல் எதிர்ந்து வரும் அவளது வெம் சினக் கொடி மூக்கும், காது இரண்டும், கூர் ஆர்ந்த வாளினால் அரிந்து, அவள் தன் பில வாயால் அலறிக் கதறி, ஓடி, தலையில் அம் கை வைத்து, மலை இலங்கை புகச் செய்தான்.

12. கரன் ஆதியர் வதம் : தண்டக-வனத்தில் தன்னை எதிர்த்து வந்த கரன் சிரம் துணித்து, தூடணன் ஆதியர் உயிரையும் வாங்கினான். தன் விற்கை வீரம் தோன்ற, கவந்தனையும் மாய்த்தான்.

13. மாய மானை மாய்த்தது: செம் பொன் நீள் முடி இராவணக் கொடியோன், சித்தம் சீதைபால் வைத்து, மாரீசனை நோக்கி, 'நீ உருவம் கரந்து, அலை மலி வேல் கண்ணாளை அகல்விப்பதற்கு, இலை மலி பள்ளி (பர்ணசாலை) எய்துவாய் ' என்றான். அவனும் பொன் ஒத்த மான் ஆகிப் புகுந்து, இனிது விளையாட, இராமன்,சீதையின் அன்பின் வழிநின்று, சிலை பிடித்து, மான் பிடிக்கச் சென்றான். புள்ளி மான் துள்ளி ஓட, முனிந்து தொடர்ந்து, மாச் சிலை வளைத்து, வாளி தொடுத்து, அம் மாய மான் மாய, வீழ்த்தினான்.

அதன் பின், இலக்குமணனும் சீதை-காவலை விட்டுப் பிரியவே, இராமன் சீதையைப் பிரிய நேர்ந்தது. அன்று அரக்கர் கோமானும் தகவிலி, தண்டகாரணியம் புகுந்து, தையலைக் கவர்ந்து சென்று, கடி காவில் சிறை வைத்தான்.

14. சடாயுவுக்கு வைகுந்தம் அருளுதல் : வைதேகி பிரிந்த பின், இராமன் தளர்வு எய்தி, (இராவணனால் தாக்குண்ட) சடாயுவை வைகுந்தம் ஏறச் செய்தான்.

15. சுக்கிரீவன் தோழமை : வனம் மருவு கவி அரசன் (சுக்கிரீவன்) மீது காதல் கொண்டு (தோழமை கொண்டு), கணை ஒன்றால் மராமரம் ஏழும் துளைபடச் செய்தான்.

பைங் கண் விறல் செம் முகத்து வானரக் கோன் வாலி உருத்து எழ, அவன் தன் மதம் அழிய, மார்பு துளைபட, சரம் துரந்து, இளையவனுக்கு அரசு அருளி, வானரக் கோன் ஆக்கினான்.

16. அனுமன் சீதையைத் தேடல்: அயோத்தியர் கோன் (இராமன்) வானரக் கோனுடன் (சுக்கிரீவனுடன்) இருந்து, சீதையைத் தேடுவதற்காக, அடையாளங்கள் மொழிந்து, அனுமனைத் தென் திசைக்கண் அனுப்பிவைத்தான்.

அனுமன் கடல் கடந்து ஏறி, கடி மதில் இலங்கை மேவும் கடிகாவில் (அசோக வனத்தில்) சிறை இருந்த கிளி மொழியாளைக்கண்டான். கண்டு, தான் அறிந்துவந்த அடையாளங்களை விவரித்து உரைத்தான்.

எல்லியம் போதில் இனிது இருக்கும்போது, சீதை மல்லிகை மா மாலை கொண்டு இராமனைக் கட்டி வைத்ததையும், சித்திரகூடத்து இருக்கும்போது, சிறு காக்கை சீதைபால் தவறு இழைக்க, இராமன் அத்திரம் (அஸ்திரம்) கொண்டு எறிய, அக் காகம், அனைத்து உலகும் திரிந்து ஓடி, புகலிடம் இன்றி, மீண்டு வந்து, 'வித்தகனே! இராமா! ஓ! நின் அபயம்' என்று முறையிடவே, அந்த அத்திரம் கண்ணை அறுத்ததுடன் அமையுமாறு, அருளப் பெற்றதையும், சிறப்பாகக் குறிப்பிட்டான்.

இவ்வாறு மொழிந்து, 'ஈது அவன் கை மோதிரமே' என்றான். சீதையும் வில் இறுத்தான் மோதிரம் கண்டு, 'அனுமான்! அடையாளம் ஒக்கும்' என்று, அம் மோதிரத்தை உச்சிமேல் வைத்து உகந்தனள்.

17. அனுமன் தூது: அனுமன் தூது மொழிந்ததும், அரக்கன், 'தூது வந்த குரங்கே! உங்கள் தோன்றலின் தேவியை விட்டுக் கொடேன்' என்றான்.

18. இலங்கை எரியூட்டுதல்: பின்னர் அனுமன் இலங்கையர் கோன் சினம் அடங்க, செல்வம் மாள, கடி கா இறுத்து, சுற்றம் கொன்று, நகரும் ஈடு அழிய, ஒள் எரி மண்டி உண்ணச் செய்தான்.

இவ்வாறு இலங்கையை வேவித்து, அனுமன் மீண்டு வந்து இராமன் அடி-இணை பணிந்தான்.

19. அணை கட்டுதல்: பரந்த கடலை இரந்து நின்றும், வழி பெறாது, அந்தக் கைமேல் அலை எறிந்து மோதக் கண்டு, அப் படு கடல் கலங்கி வெந்துபோக, சிலை வளைத்து, சுடு சரம் (அழல் அம்பு) தொடுத்தான்.

கடல் வழிபட்டு வழி விட, தான் ஆள் உகந்த குரங்கினத்தால் அதை நெருக்கி அடைக்க எவினான்.

குரங்குகள் தலையால் மலைகளைத் தாங்கிச் சென்று, அம் மலைகளும் மரங்களும் புகப் பெய்து, துவலை நிமிர்ந்து வான் அணவ, கடலைத் தூர்த்து, அணை கட்டின.

குரங்குகள் மலையைத் தூக்கக் கண்ட அணில் நீரில் குளித்து, மணலில் புரண்டு, ஓடிவந்து உதிர்த்து, கள்ளங் கவடு அற்ற உள்ளத்துடன், தானும் அணை கட்ட உதவியது. அணை கட்டி முடிந்ததும், இராமன் குரக்கினப் படையொடு குரை கடலின் மீது போய், ஆழி சூழ் இலங்கை என்றும், மலை மீது இயன்ற மதிள் இலங்கை என்றும், பகலவன் மீதியங்காத இலங்கை என்றும், பேர்பெற்ற பேரூரை அடைந்தான்.

20. போர் : வையம் எல்லாம் உடன் வணங்க, வணங்கா மன்னன் ஆகி நின்றவனை நோக்கி, 'நங்கை நம் அரக்கர் குடிக்கு நஞ்சு!' என்று அவன் தம்பியே (விபீஷணன்) சொன்னான். கனி வாய்த் திருவினைப் பிரித்த கடுவிசை அரக்கனோ எரிவிழித்து, 'தரணியாளன் என்று மானிடன் எழுந்தான்; அது கண்டு தரித்திருப்பானோ அரக்கர் கோன்?' என்று போருக்கு எழுந்தான். ஆனை, புரவி, தேர், காலாள், அணிகொண்ட சேனைத் தொகையுடன் வந்து, பொருதான்.

இராமனோ, கானில் திரியும் கரடியும், குரங்கும், முசுவும் படைத் துணையாக, அடல் அரக்கர் மானம் அழிய, எதிர்த்தான். (இலக்குமணனது) அம்பின் வாய்ப்பட்டு, ஆற்றகில்லாது, இந்திரசித்து அழிந்தான்.

கும்பகர்ணன் கூற்றத்தின் வாய் வீழ்ந்தான். கும்பனோடு, நிகும்பனும் பட்டான்.

காற்றிடைப் பூளை போல், அரக்கர் சேனை சிதறுண்டது. 'ஆஆ' என்று இரங்காது உலகத்தை அலைக்கும் அசுரர் வாழ்நாள் மேல் தீ வாய் அம்புகள் மழைபோல் பொழிய, இலங்கை மீண்டும் எரி உண்டது.

வானுளாரையும் வலிமையால் நலிந்த இலங்கையார் கோனின் பரு முடிகளை, அவ் வானவர் உகப்ப, பனங்கனி போல் உதிரச் செய்தன இராமனது சூரியனை ஒத்த சுடு சரங்கள்.

அம் மணி முடி ஒருபதும் செருக்களத்தே புரளக் கண்ட அரக்கர்கள் அஞ்சி, 'கூற்றம் மானிடமாய் வந்து தோன்றியது; இரக்கம் இன்றி எங்கோன் செய்த தீமை எமக்கு எய்திற்று' என்று சொல்லி, 'குரக்கு-நாயகர்காள்! இளங்கோவே! கோல வல் வில் இராம பிரானே! நம்பி அநுமா! சுக்கிரீவா! அங்கதனே! நளனே!' என்று கூவி, 'எம்மைக் கொல்ல வேண்டாம்' என்று முறையிட்டுக் கொண்டனர். 'நீலன் வாழ்க, சுடேணன் வாழ்க, அங்கதன் வாழ்க, அனுமன் வாழ்க' என்று வாழ்த்தி, இராமனது பெரு வெற்றி பேசி, கூத்தாடி, உயிர் தப்பினர்.

21. துயர் தீர்த்தல் : ஏழையை, இலங்கைக்கு இறையை, வாழத் தெரியா மதிஇலியை, புன்மையாளனை, வென்ற வென்றியாளன், திண் தோள் மா மணி வண்ணன், வேரி வார் பொழில் மா மயிலை, சீதை என்பதோர் தெய்வத்தை, சிறை விடுவித்து, வானவர் ஆகுலம் தீர்த்தருளினன்.

22. விபீடணனுக்கு முடி சூட்டுதல்: இராவணன் தம்பி நல்லான், விபீடணற்கு, 'என் நாமம் இலங்கும் அளவும் நீயே இலங்கை ஆள்வாய்' என்று அரசு அளித்தான்.

23. உடன் உண்ணல் : அனுமனை மர்க்கடம், விலங்கு, என்று கருதாது, காதல்-ஆதரம் கடலினும் பெருக, 'நீ செய் தகவினுக்குக் கைம்மாறு இல்லை ; உன்னோடு உடன் உண்பன் நான் !' என்று, மாருதியுடன் அமர்ந்து உண்டான்.

24. அயோத்தியில் அரசு புரிதல் : திருமகளோடு அம் பொன் நெடு மணி மாட அயோத்தி எய்திய எம்பெருமான், உலகு உய்ய, அரசு எய்தினன்.

அகத்தியன் வாய் மொழியால், தான் முன் கொன்ற அரக்கர் கோனின் பழம் பெருங் கதை கேட்டான். மிதிலைச் செல்வியின் திரு வயிறு வாய்த்த மக்கள் வாயிலாக, தன் சரிதையைக் கேட்டருளினன்.

செறி தவச் சம்புகனைச் சென்று கொன்று, செழு மறையோன் உயிர் மீட்டான். இலவணன் என்பவனைத் தம்பியால் வான் ஏற்றுவித்தான். முனிவன் வேண்ட, இலக்குமணனைப் பிரிந்தான்.

25. சோதி புகுதல் : புல், எறும்பு, தொடக்கமான சரா-சரங்களை எல்லாம் வைகுந்தத்து ஏற்றி, தானும் மணி நெடுந் தோள் நான்கும் இலங்க, விண் முழுதும் எதிர்வர, தன் சோதி புகுந்து, அமரர் அரிவருக, இனிது வீற்றிருந்தான்.

'எங்கள் கோமான் !' என்று தொண்டர்கள், இன்னமுதும் மதியாது எம்பெருமான் சரிதையைச் செவியாலும் கண்ணாலும் பருகி இன்புறுவர்.

பலராமாவதாரம்

இராமனாகத் தோன்றிய பின், கண்ணனாகத் தோன்றுவதற்கு முன், கரு மா முகில் வண்ணன் கண்ணனுக்கு மூத்தோனாக, வெண் சங்கின் வண்ணமான மா மேனியுடன் தோன்றினன். ஒற்றைக் குழையும் நாஞ்சிலும் தரித்தான்.

இவனும் கண்ணன்போல், ஆயர்பாடியில் வளர்ந்தான். ஆனால், கண்ணன்போல் களவு முதலியன செய்தறியான் என்பர் ஆய்ச்சியர்.

ஸ்ரீ கிருஷ்ணவதாரம்

1. கண்ணன் பிறப்பு : *திரு மடந்தை, மண் மடந்தை, இரு பாலும் திகழ, சுடர் ஆழி வெண் சங்கு இருபால் பொலிந்து தோன்ற, எழ் உலகும் தனிக் கோல் செல்ல, தன்னுடைச் சோதியில் வீற்றிருந்த பரம்பொருளை விண்ணோர்கள் நல் நீராட்டி, சூட்டு நன் மாலைகள் தூயன எந்தி, தூபம் தரா நிற்கவே, அவன் அங்கு ஒரு மாயையினால், நிலமங்கை துயர் தீர, மண் உலகில் மனிசர் உய்ய, கண்ணன் அவதரித்தருளினான். சாது சனத்தை நலியும் கஞ்சனைச் சாதிப்பதற்கு ஆதி அம் சோதி உருவை அங்கு வைத்து, இங்குப் பிறந்தான்.*

மல்லை மூதூர் வட மதுரையில், ' என்ன நோன்பு நோற்றாள்-கொலோ இவனைப் பெற்ற வயிறுடையாள் ?' என்னும் வார்த்தை எய்துவிக்க, ' மத்தக் களிற்று வசுதேவர் தம்முடைச் சித்தம் பிரியாத தேவகி-தன் வயிற்றில் ', மக்கள் அறுவரைக் கல்லிடை மோத இழந்த அத் தாயைக் குடல் விளக்கம் செய்ய, தந்தை காலில் பெரு விலங்கு தாள் அவிழ, கண்ணன் பிறந்தான். கஞ்சன் வலை வைத்த அன்று, கார் இருளில், சிறையில், அத்தத்தின் பத்தாம் நாள் (திருவோணம்) நிகழ்ந்தது இப் பிறப்பு.

2. ஆய்ப்பாடி அடைதல் : *ஓர் இரவில் ஒருத்தி மகனாய்ப் பிறந்தவன், அதே இரவில் ஒருத்தி மகனாய் ஒளித்து வளரலுற்றான். தேவகி சிங்கம் தெய்வ-நங்கை யசோதைக்குப் பேதைக் குழவியாய், அறம் செய்யும் நந்தகோபன்-தன் இன் உயிர்ச் சிறுவனாய், பல தேவற்கு ஓர் கீழ்க் கன்றாய், ஆயர் பாடிக்கு அணி விளக்காய், ஆயர்கள் நாயகனாய், கொம்பனார்க்கு எல்லாம் கொழுந்தாய், திகழ்ந்தான்.*

பெற்ற அன்னை புலம்ப, வளர்த்த அன்னை தொல்லை இன்பத்து இறுதி கண்டாள்.

3. மங்களம் கொண்டாடுதல் : *பாடுவாரும், ஆடுவாரும், ஓடுவாரும், விழுவாரும், ' நம்பிரான் எங்கு உற்றான் ?' என்று நாடுவாரும் ஆயிற்று ஆய்ப்பாடி.*

எண்ணெய், சுண்ணம், எதிரெதிர் தூவுவார் ; நறு நெய், பால், தயிர், நன்றாகத் தூவுவார் ; உறியை முற்றத்து உருட்டி நின்று, ஆடுவார்—அறிவழிந்து, ஆனந்தம் ஆயிற்று ஆய்ப்பாடி.

' ஆண் ஒப்பார் இவன் நேர் இல்லை ' என்பார் ; ' ஓணத்தான் உலகு ஆளும் ' என்பார்.

4. பிள்ளை வாயுள் வையம் கண்டது : குழந்தைக் கண்ணனைக் கையும் காலும் நிமிர்த்தி, பைய நீராட்டினுள் யசோதை. அப்பொழுது, பசுஞ் சிறு மஞ்சளால் நாக்கு வழிக்க, குழந்தை திறந்த வாய்க்குள் உலகம் எழும் கண்டாள் ஏர் ஆர்ந்த கண்ணி யசோதை.

இந்த நிகழ்ச்சியை மறக்க முடியவில்லை. காது குத்தும்போது, 'குழந்தாய் ! நீ விண்ணெல்லாம் கேட்க அழுதிட்டாய் ; அந்த உன் வாயில் மண்ணெல்லாம் கண்டேன் ; அஞ்சினேன்' என்றாள்.

5. சீராட்டி வளர்த்தல் : பத்து நாளும் கடந்த இரண்டாம் நாள், ஆயர்கள் சய மரம் கோடித்து, குழந்தையைப் பிரசவ அறையில் நின்று வெளிக் கொணரும் சடங்காகிய உத்தானம் கொண்டாடி, உகந்தனர்.

தூளித் தொட்டிலில் யசோதை குழந்தையைக் கிடத்துவாள் ; எடுத்துக் கொள்வாள் ; அணைத்துக் கொள்வாள் ; தன் தோழியை நோக்கி,

கிடக்கில், தொட்டில் கிழிய உதைத்திடும் ;
எடுத்துக் கொள்ளில், மருங்கை இறுத்திடும் ;
ஒடுக்கிப் புல்கில், உதரத்தே பாய்ந்திடும் ;
மிடுக்கிலாமையால், நான் மெலிந்தேன், நங்காய் !

என்று கூறுவாள்.

மற்ற ஆய்ச்சியர்களுக்கு, பாதாதி-கேசமாகக் குழந்தையின் அழகைக் காட்டுவாள். தாலாட்டுவாள் ; பாலூட்டுவாள் ; அம்புலி காட்டுவாள்.

6. பூதனை வதம் : தீ மனத்தான் கஞ்சனது வஞ்சனையால், தாயும் பிறரும் அறியாத நள் இருளில், புள் உரு ஆகி வந்த பொல்லா வடிவுடைப் பேய்ச்சி பூதனை, பெற்ற தாய்போல் வந்து, குழந்தைக் கண்ணனை எடுத்து, ஒக்கலில் வைத்து, 'பால் உண்' என்று நச்சு முலை உண்ணக் கொடுத்தாள். குழந்தையும் முலை உண்பான் போலே, முனிந்து, உயிர் உண்டான். பேய்மகள் அலறி, மண் சேர்ந்தாள்.

7. சகடம் உதைத்தல் : யசோதை யமுனை நீராடப் போன பொழுது, ஆணிப் பொன்னால் செய்த வண்ணச் சிறு தொட்டிலில் உறங்குவான்போலே கிடந்த பிள்ளை, மலைபோல் உருண்டு வந்த சகடத்தைத் தாள் நிமிர்த்து உதைக்க, அச் சகடம் தளர்ந்து முறிந்தது. கஞ்சன் அனுப்பிய கள்ளச் சகடாசுரன் உடல் பிளந்து, மடிந்தான்.

இது, 'நாலைந்து திங்கள் அளவிலே' நிகழ்ந்தது என்று பெரியாழ்வாரும், 'நம்பி பிறந்த எழு திங்களில்' என்று திருமங்கை மன்னனும் கூறுவர்.

8. **குழந்தையின் லீலைகள் :** தன் முகத்துச் சுட்டி தூங்கத் தூங்க, தவழ்ந்து போய், பொன் முகக் கிண்கிணி ஆர்ப்ப, புழுதி அளைவான்.

கோல நறும் பவளச் செந் துவர் வாயினிடைக் கோமள வெள்ளி முளைபோல் சில பல் இலக, கண-கண சிரிப்பான் ; முன் வந்து முத்தம் தருவான் ; முத்து அனைய முறுவல் செய்வான்.

அழகிய வாயில் அமுத ஊறல் தெளிவுற, மழலை முற்றாத இளஞ் சொல்லால், 'அம்புலீ! சந்திரா! மாமதீ! விரைந்து ஓடி வா' என்று அழைப்பான். தாயின் முதுகைக் கட்டிக் கொள்வான். கிண்கிணிகள் ஒலிப்ப ஓடுவான் ; ஓடிஓடிப் போய்விடுவான்.

பாடிப் பாடி வருவான் ; அசைந்து அசைந்து கூத்தாடுவான். பூங் குழலார்கள் எண்ணத்துள் என்றும் தித்திக்க இருந்து, லீலைகள் பல புரிவான்.

9. **வெண்ணெய் உண்டது :** கண்ணன் மெள்ள நடந்தும், துள்ளி விளையாடிச் சென்றும், ஆய்ச்சியர் மனைகள் தோறும் திரிந்து, தித்தித்த பாலும், தடாவினில் வெள்ளி மலை இருந்தால் ஒத்த வெண்ணெயும், மெத்தத் திரு வயிறு ஆர, விழுங்குவான்.

தோய்த்த தயிரும், நறு நெய்யும், உளம் குளிர, அமுது செய்வான். எட்டாத உறிகளில் உள்ள வெண்ணெய், பால், முதலியவற்றை எட்டி எடுக்க, பொத்த உரலைக் கவிழ்த்து, அதன்மேல் ஏறுவான். ஒத்த தோழர்களுக்கும் வாரி வழங்குவான்.

'வைகலும் வெண்ணெய் கைகலந்து உண்டான்' என்று ஆய்ச்சியர் பேசினர், ஏசினர், நகைத்தனர்.

'வெண்ணெயே அன்று, இருந்த பாலும் பதின் குடம் கண்டிலேன், நந்தன் மகன் அல்லால் மற்று வந்தார் ஆரும் இல்லை' என்று ஆய்ச்சி ஒருத்தி யசோதையை அணுகி முறையிட்டாள்.

ஆய்ச்சியர் அழைப்ப, கண்ணன் வெண்ணெய் உண்டதும் உண்டு. ஒளித்தும், நாணாது, வெண்ணெய் உண்பான். உறி ஆர்ந்த நறு வெண்ணெய் ஒளியால் சென்று, அங்கு உண்பான். மிடறு மெழுமெழுத்தோட, வெண்ணெய் விழுங்குவான். வெறுங் கலத்தை உடைய விட்டு, ஓசை கேட்பான்.

அருகு இருந்த மோர்க் குடம் உருட்டி, ஓர் ஆய்ச்சி கண்டு கொண்டதும், ஓராதவன்போல், முன் இருந்த இடத்திலே கிடந்தான்.

வேல் கண் மடவாள் போந்தனையும் பொய் உறக்கம் உறங்கி, பிறகு அறிவுற்று, தோள் அளவும் கைந் நீட்டி, முழுதும் வெண்ணெய் அளைந்து உண்பான்.

வெண் தயிர் தோய்ந்த செவ்வாய் கண்டு, தாய் எடுத்த சிறு கோலுக்கு உளைந்து ஓடி, தயிர் உண்ட வாய் துடைத்தான்.

எழில் கொள் தாம்பு கொண்டு தாய் அடிப்பது போல் நிற்க, கண்ணன் அஞ்சி நோக்கினன்; தொழுதான்; அணிகொள் செஞ் சிறு வாய் நெளித்து அழுதான். இது கண்ட யசோதை தொல்லை இன்பத்து இறுதி கண்டாள்.

10. உரலில் கட்டுண்ணல்: விரலோடு வாய் தோய்ந்த வெண்ணெய் கண்டு, ஆய்ச்சி (யசோதை) அன்புற்று நோக்கி, தன் மோதிரக் கையால் கையைப் பிடித்து, ஊரார் எல்லாரும் காண, கண்ணி நுண் சிறுத் தாம்பினால், 'நீர் ஆம் இது செய்தீர்!' என்று உரலோடு கட்டினள்.

மொத்துண்டு, அப் பெரு மா உரலில் பிணிப்புண்டிருந்து, குரல் ஓவாது, விம்மி விம்மி, ஏங்கி, அழுதான் கண்ணன்.

உரலினோடு இணைந்திருந்து ஏங்கிய அவ் எளிய வடிவு, உதரத்திலே கட்டப் பெற்றதால் தழும்பிருந்த தாமோதரன் ஆயிற்று.

11. மருதம் முறித்தது: மைத்த கருங் குஞ்சி மைந்தன், ஆய்ச்சி உரலோடும் ஆர்க்கப் போய், ஓடி, ஒருங்கு ஒத்த இணை மருதூடு நடந்து, அம் மரம் இரண்டும் சாய்த்து, பொய்ம் மாய மருதான அசுரரை, எண் திசையோரும் வணங்க, மாய்த்தருளினன்.

12. இளமை விளையாட்டு: ஆற்றில் சிறுமிகள் விளையாடிக் கொண்டிருக்க, அவர்களைச் சேற்றால் எறிந்து, வளையும் துகிலும் கைக்கொண்டு, காற்றினும் கடியனாய் ஓடி, அகம் புகுந்தான். அது குறித்து அவர்கள் கேட்க, மாற்றமும் தாரான்.

பூங்குழலார் துகில் கைக்கொண்டு, மரத்தில் ஏறுவான்: வேண்டவும் தாரான்.

மாளிகை மச்சில் ஏறி, மாதர்கள் இடம் புகுந்து, கச்சொடு, பட்டைக் கிழித்து, துகிலவை கீறினன்.

கன்றுகள் ஓட, செவியில் கட்டெறும்பு பிடித்து இடுவான். கன்றின் வாலில் ஓலை கட்டி விடுவான். எண்ணெய்க் குடத்தை உருட்டுவான்; இளம் பிள்ளையைக் கிள்ளி எழுப்பி, கண்ணைப் புரட்டி விழிப்பான்.

சிறுமியர் முற்றும் முதுகு நோவ இருந்து, சிறு சுளகுகொண்டு வண்டல் நுண் மணலும், வெள்ளை நுண் மணலும் தெள்ளி, வளைக்

கைகளால் விசித்திரப் பட வீதிவாய் இழைத்த சிற்றில்களை, இரக்கம் இன்றி, சிதைப்பான். புன்முறுவல் செய்து, சிற்றிலோடு சிந்தையும் சிதைப்பான்.

பாலைக் கறந்து, அடுப்பேற வைத்து, மகள் இருப்ப, ஆய்ச்சி ஒருத்தி மேலையகத்தே நெருப்பு வேண்டிச் சென்று, இறைப் பொழுது அங்கே பேசிநின்றாள். அச் சமயம் பார்த்து, கண்ணன் அப் பாலைச் சாய்த்துப் பருகினன்.

திருவோண விழாவில் செந்நெல் அரிசி, சிறுபருப்பு, அக்காரம் (சர்க்கரை), நறுநெய், பாலால் அட்ட அடிசிலை எல்லாம் விழுங்கி, 'இன்னம் உகப்பன் நான்!' என்றான். கன்னல் இலட்டுவத்தோடு, சீடை, எள்ளுண்டை, கலத்தில் இட்டுத் தன் அகம் என்று வைத்துப் போக, இவன் புகுந்து, அவற்றை உண்டு, இன்னும் அங்கு உறியை நோக்கி, வெண்ணெயும் சோதித்தான்.

ஓர் இல்லம் புகுந்து, சிறுமியைக் கூவி, கை-வளை கழற்றி, கொல்லையில் நின்றும் நல்ல நாவற் பழங்கள் கொணர்ந்து விற்ற ஒருத்திக்கு அவ் வளை கொடுத்து, பழங்கள் கொண்டு, 'நான் அல்லேன்' என்று சிரித்தான்.

13. ஆநிரை மேய்த்தல்: வேலிக்கோல் வெட்டி, விளையாடு வில் ஏற்றி, பீலித் தழை பிணைத்து, குடையும் செருப்பும் இலாதே, ஆநிரை மேய்க்கப் போய், கரிய திருமேனி வாடக் கானகம் எல்லாம் அலைந்து திரிந்தான்.

மாதர் வந்து, அலர் தூற்றி, மனைகள் தோறும் தீமைசெய்து திரியாமே, அன்னை கண்ணனைக் கன்றின்பின் போக்கிய பின், மனம் கரைந்து 'பொன் அடி நோவ, என் இளஞ் சிங்கத்தைக் கானில் போக்கினேன், எல்லே பாவமே!' என்று இரங்கினள்.

'சிற்றாடையும் சிறு பத்திரமும் (கத்தியும்) கட்டிலின் மேல் வைத்து, செங்கமல அடிகள் வெதும்ப, கஞ்சன் மனத்துக்கு உகப்பனவே செய்தாய்!' என்று புலம்பினள்.

காலிக்குப் பின்னே கண்ணன் வருகின்ற கோலம் கண்டு, ஆய்ச்சி, 'கண்ணா! உன் கண்கள் சிவந்தாய்; என்னின் மனம் வலியாள் ஒரு பெண் இல்லை: நாளைத் தொட்டுக் கன்றின்பின் போகேல்' என்றாள்.

கண்ணன் வழக்கம்போல் கறவைகள் பின் சென்று, கானம் சேர்ந்து, இட்டமான பசுக்களை இனிது மறித்து நீரூட்டினன். கணங்களோடு மின்மேகம் கலந்தால்போல, வனமாலை மினுங்க நின்று, விளையாடுவான். அக் காலங்களில் வேர்த்து, பசித்து, வயிறு அசைந்து, வேண்டும் அடிசில் உண்பான்.

சிந்துரப் பொடி கொண்டு சென்னி அப்பி, திருநாமம் இட்டு, முல்லை நல் நறு மலர், வேங்கை மலர் அணிந்து, சுரிகையும் வில்லும் செண்டுகோலும் மேலாடையும் தோழன்மார் கொண்டு ஓட, ஒரு கையால் ஒருவன் தோளை ஊன்றி, ஒரு கையால் வளைகோல் வீசி, பல்லாயர் குழாம் நடுவே எல்லியம்போதில் காலிப் பின் வரும் கண்ணனைக் கண்டு, கன்னியர் காமுறுவாராயினர்.

குழல்களும் கீதமும் ஆகி எங்கும், கோவிந்தன் வருகின்ற கூட்டம் கண்டு, 'மழைகொலோ வருகின்றது' என்று சொல்லி, மங்கைமார் சாலக வாசல் பற்றி, நுழைவனர் நிற்பனராகி, உள்ளம் விட்டு ஊண் மறந்தனர்.

14. குழலிசை பாடியது : குழல் இருண்டு சுருண்டு ஏறிய குஞ்சிக் கோவிந்தன் தன் கோமள வாயில் குழலை வைத்துக் கொண்டு,ஊதுவான். இடக் கன்னத்தை இடத் தோளொடு சாய்த்து, இரு கை கூட, புருவம் நெரிந்து ஏற, குட வயிறு பட, வாய் கடை கூட, குழல் ஊதுவான்.

அந்தத் தூய வாயில் குழலோசை கேட்டு, கோவலர் சிறுமியர் குதுகலிப்ப காவலும் கடந்து, கயிறு மாலை ஆகி வந்து, சூழ்ந்து கொண்டனர். மடமயில்களொடு மான்பிணைபோலே அம் மங்கைமார்கள் மலர்க் கூந்தல் அவிழ, உடை நெகிழ, ஓர் கையால் பற்றி, ஒல்கி, ஓடு அரிக்கண் ஓட, நின்றனர்.

வானிளம்படியர் வந்து வந்து ஈண்டி, மனம் உருகி, மலர்க் கண்கள் பனிப்ப, சென்னி சேர்த்து நின்றனர். மேனகையொடு, திலோத்தமை, அரம்பை, ஊர்வசி முதலோர் ஆடல் பாடல் மறந்து, வாய்திறப்பு இன்றி, வெள்கி மயங்கினர். தும்புருவோடு, நாரதனும், வீணை மறந்தனர். கின்னர-மிதுனங்களும் தம்தம் 'கின்னரம் தொடுகிலோம்' என்றனர். அம்பரம் திரியும் கந்தர்வர் எல்லாம் அமுத கீத வலையால் சுருக்குண்டு, 'நம்பரம் அன்று' என்று நாணி, மயங்கி, நைந்து, சோர்ந்து, கைம் மறித்து நின்றனர். குழலிசை அமரலோகத்து அளவும் சென்று இசைப்ப, வானவர் எல்லாம் அவி-உணு மறந்து, ஆயர்பாடி நிறையப் புகுந்து, ஈண்டி, செவி-உணவின் சுவைகொண்டு, மகிழ்ந்து, கோவிந்தனை என்றும் விடாது தொடர்ந்தனர்.

சிறு விரல்கள் தடவிப் பரிமாற, குறு வெயர்ப் புருவம் குடிலிப்ப, குழல்கொடு ஊதினபோது; பறவைக் கணங்கள் கூடு துறந்து, வந்து, சூழ்ந்து, படுகாடு கிடப்ப ; கறவைக் கணங்கள் கால் பரப்பி, கவிழ்ந்து, இரங்கி, செவி ஆட்டாது, நின்றன. மான் கணங்கள் மருண்டு, மேய்கை மறந்து, மேய்ந்த புல்லும் கடைவாய் வழி சோர,

புடைபெயராது, எழுது சித்திரங்கள் போல,நின்றன. மரங்கள் மதுத் தாரைகள் பாய, நின்றன; மலர்கள் வீழ்ந்தன; வளர் கொம்புகள் தாழ்ந்தன, இரங்கின, கூம்பின—திருமால் நின்ற நின்ற பக்கம் நோக்கி.

15. கூத்து ஆடியது : மணல்-குன்று ஏறி, மூத்த அவை காண, உவந்து, கூத்து ஆடினன். குடங்கள் தலைமீது எடுத்துக் கொண்டு, சுழன்று ஆடினன். குடங்களை எடுத்து, ஏறவிட்டு, கூத் தாடினன். தெருவிலே குடம் இரண்டு ஏந்தி, 'ஆர், ஆர்?' எனச் சொல்லி, பறை கறங்க, பாரோர் மகிழ, ஆடினன். மரக் கால் கூத்தும் ஆடினன்.

நுண் இடை ஆய்ச்சியர்-தம்மொடும் கோத்து, அசைந்து, குர வைக் கூத்து ஆடினன்.

தாய்மார் மோர் விற்கப் போக, தகப்பன்மார் கறவைப் பசுக்-கள் மேய்க்கப் போக, ஆயர் குலக் கொழுந்து பெண்டிர்க்கு அணுக் கனாய்த் திரிந்தான்.

மகளிர் பங்கயநீர் குடைந்தாட, பின்னே சென்று, ஒளித் திருந்து, பூந் துகில் வாரிக்கொண்டு மரம் ஏற, அவர்கள் இரப்ப, 'மங்கைநல்லீர், வந்து கொள்மின்' என்றான். பிறகு, பூங் குருந்தம் ஒசித்து, ஆடைகளை அளித்தான்.

16. அசுரர்களை அழித்தல் : கன்றின் உரு ஆகி, மேய்ப் புலத்தே வந்த கள்ள அசுரனைச் சென்று பிடித்து, சிறு கைகளாலே விளங் காய் எறிந்து,அந்த அசுரனையும் மாய்த்தான். தேனுகன் ஆவி போக, அங்கு ஓர் பனங்கனி உதிர, எறிந்தான். பிலம்பனை, புள் உருவாய் வந்த பகனை, கேசியை, மற்றும் பல அசுரர்களை, அழித்தான்.

17. காளிய நடனம் : நஞ்சு உமிழ் நாகம் கிடந்த நல்-பொய்கை புகுந்து, கலக்கி, அடங்கா விடம் காலும் அரவத்தை, வால் பற்றி ஈர்த்து, படம் படு ஐந் தலைமேல் பாய்ந்து ஏறி, பல் மணி சிந்த, தூய சுந்தர நடனம் பயின்று அருளினன்.

18. நப்பின்னை திருமணம் : நல் தோகை மயில் அனைய ஆயர் இளங் கொடி நப்பின்னை காதலால், ஏழு எருதுகளைக் கொம்பு ஒடிய, வலி அழித்து, மணம் புரிந்தான்.

19. கல்லாலே கல்மாரி காத்தது : வானவர் கோன் இந்திரனு ருக்கு என்று ஆயர் எடுத்த விழாவில், மலைபோல் அமைத்த சோற் றுப் படையலை, கறியொடும் தயிரொடும் நெய்யொடும் கலந்து, கண்

ணன், முற்ற வாரி வளைத்து, உண்டான். அமரர்பதி மிக வெகுண்டு, காள மேகங்களால் ஏழு நாள் கல்மாரி பெய்விக்க, ஆய்ச்சியரும், ஆயரும், ஆநிரையும், அலறி, சரண் புக, மணி நெடுந் தோள் காம்பாகக் கொடுத்து, தடங்கை விரல் ஐந்தும் மலரவைத்து, 'கல் எடுத்துக் கல் மாரி காத்தாய் !' என்று உலகெலாம் போற்ற, கோவர்த்தனம் என்னும் கொற்றக் குடை பிடித்தான்.

20. கஞ்சன் வதம் : சாது சனத்தை நலியும் வஞ்சக் கஞ்சனுக்கு நஞ்சு ஆகி, நெஞ்சிலே நெருப்பு என்ன நின்ற கண்ணன், அவன் கருத்தைப் பிழைப்பிக்கும் நோக்குடன், வட மதுரையில் நடத்திய வில் விழாவுக்குச் சென்றான். அங்கே கூனி ஒருத்தி சந்தனம் கொண்டுபோக, 'அதை நமக்குக் கொஞ்சம் நல்குவாய்' என்று கண்ணன் கேட்க, அவளும் திருமேனியில் பூச, அவள் கூனை உள்ளே ஒடுங்க, நிமிர்த்தி அருளினான்.

புகு வாசலில் நின்றது கஞ்சன் விட்ட வெஞ்சினக் கொலை வேழம். அது கலங்க, மருப்பினைப் பறித்து, அதை, சாடிக் கொன்று, பாகனையும் வீழ்த்தினான் கண்ணன்.

இரு மலைபோல் எதிர்ந்துவந்த இரு மல்லரையும் மல்-போரில் மாய்த்து, 'மல்அமருள் மல்லர் மாள, மல் அடர்த்த மல்லா !' எனப் போற்ற நின்றான்.

அப்பால், நெஞ்சில் கறை கொண்ட கொடுமைக் கஞ்சனை உதைத்துக் கொன்று, தன் தாதை காலில் அவன் கோத்த தளைகோள் விடுத்தான்.

21. குரு தட்சிணை : மாதவத்தோன் (சாந்தீபினி புத்திரன்) மறி கடல்வாய் மாண்டான். ஓதுவித்த தக்கணையாக, அவனை உருவோடு அப்படியே கொடுத்தான்.

22. ருக்மிணி பரிணயம் : கண்ணாலம் கோடித்து, கன்னி-தன்னைக் கைப்பிடிப்பான், திண்ணார்ந்திருந்த சிசுபாலன் தேசு அழித்து, ஆங்கு அவளைக் கைப்பிடித்து, உருப்பிணி நங்கையை வலியத் தேரேற்றிக்கொண்டு, விருப்புற்று வரும்போது, அவளை மீட்பான், விரைந்து செருக்குற்று எதிர்வந்தவன் வீரம் சிதைத்து, மானபங்கம் செய்து, தேவியை மணம் புரிந்தான்.

கேட்பார் செவி சுடும் கீழ்மை வசைவுகளே வையும் பழம் பகைவன் சிசுபாலனை வதைத்து, தன் திருவடி அடையச் செய்தான்.

23. கற்பகம் கொணர்தல்: கற்பகக் காவு கருதிய காதலிக்காக, 'இப்பொழுது ஈவன்' என்று, இமையவர்கோனைச் செற்று, காவளம் கடிது இறுத்து, கற்பகம் கொண்டு, துவாரகையில் நட்டான்.

24. சிமாலிகன் முதலானோர் வதம்: சிமாலிகனோடு தோழமை கொண்டிருந்தும், அவன் உள்ளம் கண்டு, அவனைச் சாகுமாறு, சக்கரத்தால் தலை கொண்டான்.

காய் சினத்த காசி மன்னன், வக்கரன், பௌண்டிரன், நரகன் முரன், முதலானோரை வதம் செய்தான்.

25. வாணன் தோள் துணித்தல்: ஈசன், தன் படையோடும் கிளையோடும், ஓட, வாணனை ஆயிரம் தோள் துணித்தான்.

26. பாரதக் கதைகள்: காண்டவ-வனம் என்பதோர் காடு அமரர் அரசனுக்கு உரியது. சோலை நிறைந்த அவ் வனத்தை அழல் உண்ண முனிந்தான்.

அந்தகன் சிறுவன், அரசர்-தம் அரசற்கு இளையவன் (துச்சாதனன்) அணியிழையை (பாஞ்சாலியை) அணுகி, 'எம்-தமக்கு உரிமை செய்' என, அவள் தரியாது, 'எம்பெருமான், அருள்!' என்ன, அருள் செய்தான்.

ஒன்றே உரைப்பான், ஒரு சொல்லே சொல்லுவான், துன்று முடியான், துரியோதனன் பக்கல் தூது சென்றான். ஐவர்க்கு ஆய் மண் அகலம் கூறு இடுவான், மன்னவனால் சொல்லுண்டான். அரவு நீள் கொடியோன் அவையுள் ஆசனத்தை அஞ்சிடாதே இட, பெரிய மா மேனி அண்டம் ஊடுருவ, பெருந் திசை அடங்கிட, நிமிர்ந்தான். ஊர் ஒன்று பெறாத உரோடத்தால், பார் ஒன்றிப் பாரதப் போர் மூட்டினான். 'நம்பி, சரண்' என்று தாழ்ந்த தனஞ்சயனுக்காக மணித் திண் தேர் ஊர்ந்தான்.

பற்றார் நடுங்க, பாஞ்சசன்னியத்தை வாய் வைத்து ஊதினான்.

பார்த்தனும், வைதிகனும், உடன் ஏற, திண் தேர் கடவி, சுடர் ஒளியாய் நின்ற தன்னுடைச் சோதியில் வைதிகன் பிள்ளைகளை உடலொடும் கொண்டு கொடுத்தான். மண்மிசைப் பெரும் பாரம் நீங்க, பாரத மாப் பெரும் போர் முடித்தான்.

உத்தரையின் சிறுவனும் மருமகன் சந்ததியுமான அவன் (பரிட்சித்து) உயிர் மீட்டு, மைத்துனன்மார் உருமகத்தே வீழாமே, குருமுகமாய்க் காத்தான்.

மைத்துனன்மார் காதலி கூந்தல் முடிப்பித்து, அவர்களையே மன்னர் ஆக்கினான்.

கற்கி அவதாரம்

தவ நெறிக்கு ஓர் பெரு நெறி ஆய், வையம் காக்கும் கடும் பரி மேல் கற்கியும் ஆனான்.

2. பிற கதைகள்

மஞ்சு ஆடும் மலை ஏழும், கடல்கள் ஏழும் திசைகள் எட்டும், வானகமும், மண்ணகமும், மற்றும் எல்லாம், எஞ்சாமல் வயிற்று அடக்கி, அன்னவசமாகி, ஊழி வெள்ளத்து, ஓர் ஆலின் இளந் தளிர் மேல் பாலகனாய், பரம்பரன், பைய யோகு துயில் கொண்டவன், பெரு வெள்ளம் உண்ணாமல், தான் விழுங்கி, உய்யக்கொண்ட மண்நாடும், விண்நாடும், வானவரும், தானவரும், மற்றும் எல்லாம், ஒழியாமே உமிழ்ந்த பெருவாயன் ஆனான்.

உளைந்திட்டு எழுந்த மது-கைடவர்கள் வலியால் வயிரம் விளைந்திட்டது என்று விண்ணோர் பரவ, பெருமான் அவர் நாள் ஒழிக்க, அவர்கள் வயிறு உருகி மாய்ந்தார்.

ஈசனைப் பயந்த நான்முகனை, தன் உந்தி மா மலர் மிசைப் படைத்து, 'நீ உலகெலாம் படை' என்று பணித்தான்.

கலைகளும், வேதமும், நீதிநூலும், கற்பமும், சொற்பொருள் தானும், மற்றை நிலைகளும், வானவர்க்கும், பிறர்க்கும், நீர்மையினால் அருள்செய்தான்.

பேரிருள் சூழ்ந்து உலகை மூட, நான்மறை முற்றும் மறைந்திட, அன்னம் ஆகியும், பரிமுகம் ஆகியும், அருமறை தந்தான்.

அழல் உமிழ் ஆழிகொண்டு எறிந்து, அங்கு எதிர்முக அசுரர் வன்குலம் வேர் அறுத்தான். மாசினத்த மாலி, சுமாலி, காலநேமி, காலனோடு கூடுமாறு வில் குனித்தான்.

நீறு பூசி, ஏறு ஊரும், இறையோன் சென்று குறை இரப்ப, தன் மார்வு அகலத்துக் குருதி-நீர் அளித்து, உகந்து, அவன் சாபம்-அது நீக்கினான்.

நான்முகன் தன் வாழ்நாள் மிகுதி பற்றி மேற்கொண்டிருந்த தருக்கை, வேத வாய்மொழி உரோமச முனிவனால் போக்கினான். பனி சேர் விசும்பில் பால் மதியின் தேம்புகின்ற இடரைத் தீர்த்து, சிறை விடுத்தான்.

கத்திரபந்துவும் (க்ஷத்திரபந்து) மொய்த்த வல்வினையுள் நின்று மூன்று எழுத்து உடையபேரால் (கோவிந்த நாமத்தால்) பராங்கதி கண்டுகொண்டான்.

நமனும், முற்கலனும் (நாரணன் நாமங்கள்) பேச, நரகில் நின்றார்கள் கேட்க, நரகமே சொர்க்கம் ஆயிற்று.

மீன் அமர் பொய்கையில், நாள்மலர் கொய்வான் வேட்கையினோடு சென்று, இழிந்த வேழத்தின் கால் முதலை வாய்ப்பட, அது துதிக்கை கூப்பி 'என் கண்ணா, கண்ணா!' என்று கதற, புள் ஊர்ந்து

சென்று, நின்று ஆழி தொட்டு, மா முதலை துணிபட, ஆனையின் துயரம் தீர்த்தான்.

நர-நாரணன் ஆய், உலகத்தில் அறநூல் சிங்காமை விரித்தான்.

சிவபிரானை ஒரு கூறுக உடைய திருமால், அப் பெருமான், திரிபுரம் எரிக்க, அழல்-அம்பாய் உதவினான். மார்க்கண்டேயனைச் சிவபிரான் உய்வித்ததும், ஆலமர நிழலில் நால்வருக்கு அறம் உரைத்ததும், அத் திருமாலின் அருளே.

புரிசடை அம் புண்ணியனும், உலகம் தாவிய நெடுமாலும், இரண்டு உருவும் ஒன்றாய் இசைந்து, ‘ ஒருவன் ஒருவன் அங்கத்து என்றும் உளன் ’ என்னுமாறு காட்சி தருவர்.

3. சரித்திரக் குறிப்புக்கள்

1. அபிமான துங்கன் : கோவிந்தன் குணம் பாடுவோர் கூடியுள்ள திருக்கோட்டியூரின் தலைவனான அபிமான துங்கன், நளிர்ந்த சீலன் ; நயாசலன்; தெளிந்த செல்வன் ; செங்கண் மால் சேவகன் (11, 367).

2. நெடுமாறன் : குறுகாத மன்னரைக் கூடுகலக்கி, வெங்கானிடைச் சிறுகால் நெறியே போக்குவிக்கும் திருமாலிருஞ்சோலைச் செல்வனை, தென்னன், தென் கூடற்கோன், கொல் நவில் கூர்வேல் நெடுமாறன், கொண்டாடினான் (344, 345).

3. பாண்டியர் குலபதி : பருப்பதத்து (இமயமலையில்), கயல் பொறித்தான் பாண்டியர் குலபதி (469).

4 தில்லை மூவாயிரவர் : ‘ செழுந் தண் சோலைத் தில்லை நகர்த் திருச்சித்திரகூடம்-தன்னுள், அந்தணர்கள் ஒரு மூவாயிரவர் ஏத்த, அணி மணி ஆசனத்து இருந்த அம்மான் ’ (742) என்பர் குலசேகரர். ‘மூவாயிரம் நான்மறையாளர் நாளும் முறையால் வணங்க, அணங்கு ஆய சோதித் தேவாதி-தேவன் திகழ்கின்ற தில்லைத் திருச்சித்திர கூடம் ’ (1165) என்பது திருமங்கை மன்னன் வாக்கு.

5. தொண்டையர்கோன் : மயிலைத் திருவல்லிக்கேணியில், மன்னு தண் பொழிலும், வாவியும், மதிளும், மாட மாளிகையும், மண்டபமும், தென்னன் தொண்டையர்கோன் செய்தான். (1077)

6. கச்சியில் வயிரமேகன் : மன்னவன் தொண்டையர்கோனால் வணங்கப்படுபவனும், நீள் முடி-மாலை உடையவனும் ஆகிய வயிர மேகனது வலிமையும் புகழும் சூழ்ந்த கச்சி மா நகரம். (1127)

7. பரமேச்சுரன் : தடங்களும், மாடங்களும், மா மதிள்களும் சூழ்ந்து, அழகு ஆய கச்சியில், வெண் குடை நிழலில், செங்கோல் நடத்தியவனும் ; விடை வெல் கொடியும், பாம்புக் கொடியும், வேல் படையும், உயர்த்தியவனும்; கடல்போல் முழங்கும் குரலை உடைய கடுவாய்ப் பறை உடையவனும் ; 'பல்லவன்', 'வில்லவன்' என்று உலகில் பலராய்ப் பல வேந்தரால் வணங்கும் கழலை உடையவனும்— ஆன மல்லையர்கோன், தேர் மன்னு தென்னவனைக் கன்னி மா மதிள் சூழ் கருவூரிலும், வில்லவனை நென்மலியிலும், பிற பகைவர் களை மண்ணையிலும், திசைப்ப, பொருதான். இவன் பணிந்தது பரமேச்சுர விண்ணகரம். (1128-1137)

8. பல்லவர்கோன் பணிந்த சித்திரகூடம் : செம் பொன் மணி மாடங்கள் சூழ்ந்த தில்லைத் திருச்சித்திரகூடத்தில் படைமன்னன் பல்லவர்கோன் பைம் பொன்னும், முத்தும், மணியும், கொணர்ந்து பணிந்தான். (1160)

9. திருநாங்கூர்த் திண் திறலாளர் : நண்ணார் முனைகளில் மா வரும் திண் படை மன்னர்களை வென்றிகொள்வாரும், துண் என மாற்றார் தம்மைத் தொலைத்தவரும், ஒண் திறல் தென்னன் ஓட, வட அரசு ஓட்டம் கண்டவரும், ஆகிய திண் திறலாளர் மன்னும் சிறப்பை உடையது திருநாங்கை. (1249, 1252, 1293, 1299, 1308)

10. தொண்டைமன்னவன் மந்திரம் பெறுதல் : துளங்கு நீள் முடி அரசர்-தம் குரிசிலான திண் திறல் தொண்டை மன்னவன் ஒருவனுக்கு உளம்கொள் அன்பினொடு, இன் அருள் சுரந்து, எழு நாழிகை உடன் இருந்து, வளம்கொள் மந்திரம் திருமால் அருளிச் செய்தார். (1426)

11. நந்திபுர விண்ணகரம் : வண்டு கிளையோடு மலர் கிண்டி, மது உண்டு, நைவளம் நவிற்றும் மழை தவழ் பொழில் உடையதும், முனியாளர் பண்ணில் மலி கீதமொடு பாடி, ஆடலொடு கூட, மண்ணில் இது போல நகர் இல்லை என வானவர்கள் மலர் தூவி, நண்ணி உறைகின்றதும், நந்தி பணி செய்ததும் ஆன, நகரம் நந்திபுர விண்ணகரம். (1438-1447)

12. கோச்செங்கணன் : செழும் பொன்னி வளம்கொடுக்கும் பொன்னி நாடனும் ; களிறு உந்தி, வெண்ணி ஏற்ற விறல் மன்னர் திறல் அழிய, வெம்மா உய்த்து, தெய்வ வாள் வலம்கொண்டு, பகை மன்னர் மணி முடிமேல் காகம் ஏறச் செய்தவனும் ; பார் ஆளர் அவர் இவர் என்று, அழுந்தை ஏற்ற படை மன்னர் உடல் துணிய, பரிமா உய்த்த தேர் ஆளனும்; வேல் ஏந்து விறல்த வேளை விண் ஏற,

தனி வேல் உய்த்தவனும் ; உலகம் ஆண்டவனும் ; தென் நாடனும் ; தென் தமிழனும் ; குடகொங்கனும் ; வட புலக் கோனும்—ஆ... திருக்குலத்து வளச் சோழன், இருக்கு இலங்கு திருமொழி வா... எண்தோள் ஈசற்கு எழில் மாடம் எழுபது செய்து, உலகம் ஆ... டவன், செம் மொழி வாய் நால்வேத வாணர் வாழும் திருநறை... மணி மாடம் சேர்ந்து, வழிபட்டான். (1498-1507)

13. மலையரையன் : பொற்புடைய மலையரையன் பணிய நின்ற பூங்கோவலூர். (2058)

14. குணப்பரன் : கோனே ! குணப்பரனே ! (2474) ஒப்பிடுக : கோழியும், கூடலும், கோயில் கொண்ட கோவலரே ஒப்பர். (1762)